OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
S. M. FERNANDO
580, HOSPITAL ROD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கண் வைத்திய நிபுணர்கள்
சோதித்து செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 16 ஞாயிற்றுக்கிழமை ( 02 10 - 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 309

# அரசியல் தலையீட்டைத் தவிர்ப்பதற்காக
# பொலீஸ் கட்டமைப்பில் பெரும் மாற்றம்

### மது ஒழிப்பு தினம்

உலக மது ஒழிப்புத் தினம் நாளை திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதனை ஒட்டி நாட்டில் உள்ள சகல மதுபான விற்பனை நிலையங்களும் இன்று இரவு முதல் நாளை மறுதினம் 4ஆம் திகதி அதிகாலை வரை மூடப்பட்டிருக்க வேண்டும் என உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் கூட்டுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

## தமிழ் நாட்டிலும் கொள்ளை நோய்?

### நால்வர் தடுத்து வைப்பு

சென்னை, ஒக். 2

கொள்ளை நோய் தொற்றி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் தமிழ் நாட்டில் பத்துப்பேர் தடுத்து வைக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

ஆரம்ப மருத்துவ பரிசோதனையின் பின்னர் இவர்களில் அறுவர் விடுவிக்கப்பட்டனர்.

ஏனைய நால்வரும் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு அவதானிக்கப்பட்டு வருகின்றனர். (இ)

## கிரிக்கெட் அணியினரின் இந்திய விஜயம் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 2

இந்தியாவில் கொள்ளை நோய் ஏற்பட்டிருப்பதன் காரணமாக மேற்கிந்தியதீவுகள் கிரிக்கெட் அணி அடுத்த மாதம் அங்கு மேற்கொள்ளவிருந்த கிரிக்கெட் சுற்றுப் பயணம் பின்போடப்பட்டுள்ளது.

இதேவேளை —

தனது நாட்டில் கொள்ளை நோய் பரவுவதைத் தடுக்க மாலைதீவு அரசும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கென விசேட மருத்துவக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ-6)

## புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரங்கள் குறைப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 2

ஸ்ரீ லங்கா பொலீஸ் பகுதியின் கட்டமைப்பில் பெரிய அளவிலான தீவிர மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பொலீஸாரின் செயற்பாடுகளிலும், நடவடிக்கைகளிலும் அரசியல் தலையீட்டைத் தவிர்க்கும் நோக்கத்துடனும் —

பொலீஸார் மக்களின் எதிரிகளாக இல்லாமல், சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு மக்களுக்கு உதவ வகைசெய்யும் இலக்குடனும் —

பொலீஸ் உயர் மட்டத்தின் கட்டமைப்பிலும், பொறுப்புகளிலும் பாரிய மாற்றங்கள் செய்யப்பட்டதாக அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்குரிய தேசிய புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரங்களும், பொறுப்புகளும் குறைக்கப்பட்டிருப்பதும் புதிய மாற்றங்களில் அடங்கும்.

பொலீஸ் திணைக்களத்தில் அரசியல் தலையீடு அதிகரித்திருந்ததால் அது மக்களில் ஒரு சாராரின் எதிரியாக மாறியதாக பிரதமர் சந்திரிகா அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

அந்த நிலைப்பாட்டை மாற்றி பொலீஸ் அதிகாரிகள் உத்தியோகத்தர்கள் அரசியல் சார்பின்றித் தமது கடமைகளை ஆற்றும் விதந்தில் பொலீஸ் கட்டமைப்பில் தீவிர மாற்றங்கள் கொண்டுவரப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் தமது பணியை சீராகச்செய்து, மக்களுக்கு உதவும் வகையில் பொலீஸ் கட்டமைப்பு, மாற்றங்கள் நடைபெற்றுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

ஸ்ரீலங்கா பொலீஸ் திணைக்களத்தின் ஆட்பலம் 70 ஆயிரமாகும். எனினும் அதன் சேவை மக்களுக்குத் திருப்தியான, நீதியான முறையில் கிடைப்பதில்லை என்ற குறைபாடு நீண்ட காலமாக நிலவி வந்தது.

அவற்றைப் போக்குவதற்காகவே பெரிய அளவிலான கட்டமைப்பு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மாற்றங்களின் ஓர் அங்கமாக —

சர்ச்சைக்குரிய தேசிய புலனாய்வு பணியகம் இன்று முதல் பாதுகாப்பு அமைச்சின் கீழ் ஆராய்ச்சி, பகுப்பாய்வு ஆகிய நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளும் வகையில் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

தகவல் சேகரிக்கும் கடமை

(6ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கே 5 லட்சம் சிறுவர் அகதி முகாம்களில் உள்ளனர்

### சிறுவர் உரிமை இயக்கம் அறிக்கை

கொழும்பு, ஒக். 2

வடகுதியில் காணப்படும் யுத்த சூழ்நிலை காரணமாக ஐந்து லட்சம் சிறுவர்கள் அகதி முகாம்களில் வாழ்ந்து வருவதாக 'சிறுவர் உரிமை இயக்கம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சிறுவர் தினம் நேற்றாகும். இதனை ஒட்டி அந்த இயக்கம் கொழும்பில் வெளியிட்ட ஓர் அறிக்கையில் இதனைத் தெரிவித் துள்ளது.

கடந்த சில ஆண்டுகளாக நிலவிவரும் அரசியல் சூழ்நிலையால் இலங்கைச் சிறுவர்களே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1978 ஆம் ஆண்டு சிறுவர்கள் மத்தியில் 10 சதவீதமாக இருந்த போஷாக்கின்மை 1992 ஆம் ஆண்டு 60 சதவீத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தக் கூடாது

### சுப்பிரமணிய சுவாமி சொல்கிறார்

சென்னை ஒக். 2

''விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது. அப்படி பேச்சு நடத்தினால் அது இந்தியாவுக்கு எதிரான நடவடிக்கையாகக் கருதப்படும் என்று இலங்கைப் பிரதமர் சந்திரிகாவிடம் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் எடுத்துக் கூற வேண்டும்.''

— இவ்வாறு தெரிவித்தார் ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி

அண்மையில் சென்னையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர். —

''விடுதலைப் புலிகளுடன் இலங்கை அரசு பேச்சு நடத்தினால் அது ''சார்க்'' தீர்மானத்தை மீறுவதாக இருக்கும் என்றும் சொன்னார்.

### அடுத்த இரு தினங்களில்

## இந்தியாவில் கொள்ளை நோய் உச்சக் கட்டத்தை அடையலாம்

கொழும்பு, ஒக். 2

தற்போது இந்தியாவில் பரவிவரும் கொள்ளை நோய் அடுத்த இரு நாட்களில் உச்சக் கட்டத்தை அடையும் என்றும் அதன்பின் தீவிரம் குறைந்துவிடும் என்றும் இந்திய சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொள்ளைநோய் தொற்றியுள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட இரண்டாயிரத்து 600 பேர் தொடர்பாக உலக நாடுகள் அச்சம் கொண்டுள்ளன.

தற்போது இந்தியாவில் 7 மாநிலங்களில் கொள்ளை நோய் பரவியுள்ளது. இந்த நோய் காரணமாக இந்தியாவின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமது உற்பத்திப் பொருள்களின் தரம் கொள்ளை நோயால் பாதிக்கப்பட மாட்டாது என இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்யும் நாடுகளுக்கு இந்தியா கூறியுள்ளது. (இ-4)

## கடும் பரிசோதனையின் பின் அகதிகள் திருமலை வந்தனர்

திருகோணமலை, ஒக். 2

அகதிகளை ஏற்றிக்கொண்டு இந்தியாவில் இருந்து நேற்று முன்தினம் திருகோணமலைக்கு திரும்பிய கப்பல் துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்டது.

துறைமுகத்திற்கு வெளியே நிறுத்தி வைக்கப்பட்ட கப்பலுக்கு மருத்துவர் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

அம் மருத்துவர் குழுவினர் கப்பலில் வைத்து அகதிகளை 3 மணி நேரம் தீவிரமாகப் பரிசோதித்தனர்.

மருத்துவ பரிசோதனையின் பின் அவர்கள் எவரும் கொள்ளை நோயால் பாதிக்கப் படவில்லை என உறுதி செய்யப்பட்டது.

இதன் பின்னரே அகதிகள் திருகோணமலைக்குள் நுழைய அனுமதிக்கப் பட்டனர்.

நேற்று முன்தினம் திருகோணமலைக்கு வந்த தமிழ் அகதிகளின் எண்ணிக்கை ஆயிரத்து 173 ஆகும்.

இதன்பின் அகதிகளை தமிழ் நாட்டிலிருந்து திருப்பி அனுப்பும் திட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொள்ளை நோய் பரவுவதே அகதிகள் வருகை நிறுத்தி வைக்கப்பட்டதற்கான காரணம் என இந்தியா கூறுகின்றது. (இ-4)

## ரூபவாஹினித் தலைவராக வசந்தராஜா நியமனம்

கொழும்பு, ஒக். 2

ரூபவாஹினி கூட்டுத் தாபனத்தின் தலைவராக பி. பி. ஸியின் 'சந்தேசய' சிங்கள சேவை நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றி வந்த திரு வசந்தராஜா நியமிக்கப் பட்டுள்ளார்.

சுமார் 20 வருடங்களாக பி. பி. ஸியில் பணியாற்றி வந்த இவர் ஆரம்பத்தில் 'தரங்கனி' நிகழ்ச்சியின் தயாரிப்பாளராக செயற்பட்டார்.

ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தலைவராக திரு. வசந்தராஜா நாளை திங்கட்கிழமை முதல் பொறுப்பேற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுத்தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணி வெற்றியீட்டியதும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக லயனல் பெர்னாண்டோ நியமிக்கப்பட்டிருந்தார். அந்த இடத்துக்கே தற்போது வசந்தராஜா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பத்திரிகையாளர் என்ற முறையில் சில மாதங்களுக்கு முன்னர் அவர் யாழ்ப்பாணம் வந்து சென்றவர். வசந்தராஜாவின் தாய் ஒரு சிங்களப் பெண்மணி தகப்பனார் யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேர்ந்தவர். எனினும் வசந்தராஜாவிற்கு தமிழ் பேசத் தெரியாது. (உ-ஐ-6)

## முச்சந்தி முனி



உவர் அனுராவின் பாடு இரண்டும் கெட்டான் நிலை பாருங்கோ......!

## காமினியை நிறுத்தும் முடிவுக்கு ஐ. தே. க. செயற்குழு அங்கீகாரம்

கொழும்பு, ஒக். 2

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நேற்று கட்சித் தலைமையகமான கொழும்பு ஸ்ரீகோதாவில் கட்சித் தலைவரும் ஜனாதிபதியுமான டி.பி விஜேதுங்க தலைமையில் கூடிய போது —

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சியின் வேட்பாளராக காமினி திஸநாயக்காவை நிறுத்தும் அறிவிப்பை அங்கீகரித்தது

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் செய்வது அடுத்த வெள்ளிக்கிழமை இடம்பெறும். ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் 9 ஆம் திகதி இடம்பெறும்.

## செயற்குழுக் கூட்டத்தில் அனுரா பங்குபற்றவில்லை

கொழும்பு, ஒக். 2

நேற்று கொழும்பில் இடம்பெற்ற ஐக்கியதேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அனுரா பண்டாரநாயக்கா பங்குபற்றவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

செயற்குழுவில் கட்சியின் உத்தியோகத்தர்களுடன், கட்சி எம். பிக்கள், மாகாண சபை, மாநகரசபை, பிரதேசசபை ஆகியவற்றின் உறுப்பினர்கள், மேற்படி சபைகள் மற்றும் நாடாளுமன்றம் ஆகியவற்றுக்கான நடத்தப்பட்ட தேர்தல்களில் போட்டியிட்டோர் ஆகியோர் அடங்குகின்றனர்;

ஐ.தே.க. பட்டியலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய — இ.தொ.கா. தலைவர் — எஸ். தொண்டமானும் நேற்றைய செயற்குழுக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

அனுரா பண்டாரநாயக்கா நேற்று முன்தினமே லண்டனில் இருந்து கொழும்பு திரும்பி இருக்கிறார். (உ-ஐ 4-6)

### மப்பும் மந்தாரமுமான காலநிலை

நாட்டில் மப்பும் மந்தாரமுமான காலநிலை இன்றும் தொடர்ந்து நிலவும் என வானிலை அவதான நிலையம் நேற்று அறிவித்தது.

## ஜனாதிபதி தேர்தல் வெற்றியை சமாதானப் பேச்சு நிர்ணயிக்கும்

### ராவய ஆசிரியர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 2

யுத்தத்துக்கு தீர்வு காண அரசு ஆரம்பித்துள்ள சமாதான முயற்சியின் வெற்றி தோல்வி அரசின் எதிர்காலத்தை மட்டுமல்லாது ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி தோல்வியையும் நிர்ணயிக்கும்.

''ராவய'' பத்திரிகை ஆசிரியரும் அரசியல் விமர்சகருமான விக்டர் ஐவன் முன்கண்டவாறு கூறினார்;

இனப்பிரச்சினைக்கு யுத்தத்துக்குப் பதிலாக அரசியல் தீர்வின் அவசியம் குறித்து பொ. ஐ. முன்னணி மக்கள் மத்தியில் பரப்பிய கருத்து முதன்முறையாக சிங்கள மக்களினால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பது தெரிகிறது.

தமிழ் மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தமிழ் மக்களி

(6ஆம் பக்கம் பார்க்க]

## படைத் தாக்குதல்களால் அமைதி முயற்சி பாதிப்புறும்

### லண்டனில் புலிகள் அறிக்கை

மணிலா, ஒக். 2

படையினரின் விமான மற்றும் தரைவழித் தாக்குதல்களினால் அரசு மேற்கொண்டுள்ள அமைதிக்கான நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்படும் என லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் அலுவலக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருப்பதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

வடக்கில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலினால் 20 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது:

சாதாரண மக்கள் கொல்லப்படும் விதமான விமானத் தாக்குதல்கள் எதுவும் அண்மையில் நடத்தப்பட்டது பற்றித் தமக்கு எதுவும் தெரியாது என இராணுவ வட்டாரங்கள் கூறியதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. [இ-ஐ-6)

### சமுர்த்தி திட்டம் அங்குரார்ப்பணம்

கொழும்பு, ஒக். 2

பொ. ஐ. மு. அரசின் முக்கிய பொருளாதாரத் திட்டமான ''சமுர்த்தி'' திட்டத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பிரதமர் சந்திரிகா தலைமையில் இன்று முற்பகல் 10 மணிக்கு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. [ஐ-6]

## வெளிநாட்டவர்கள் குடியேறுவதை கட்டுப்படுத்தும் கடும் சட்ட விதிகள்

### பிரிட்டனில் நேற்று முதல் அமுலில்

லண்டன், ஒக். 2

பிரிட்டனில் வெளி நாட்டவர்கள் குடியேறுவதைக் கட்டுப்படுத்தும் புதிய குடிவரவு குடியகல்வுச் சட்ட விதிகள் நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளன.

ஆகக் குறைந்தது [illegible] லட்சம் பவுண்களை [illegible] குடியேற புதிய சட்ட விதிகள் [illegible] முதலீடு செய்யக்கூடிய [illegible] ராக உள்ள வெளிநாட்டவர் [illegible] ஏற்கனவே பிரிட்டனில் [illegible] தமது குடும்ப உறவினர்களை தம்முடன் இணை[illegible] கொள்வதையும் புதிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 23 — 09 — 1921 | 12 — 10 — 1993 |

அமரர்
### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை
(இளைப்பாறிய ஆசிரியர்)

திதி: **02 - 10 - 1994**

அன்பின் திருவுருவாய், பாசத்தின் பிறப்பிடமாய் இருந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் நினைவு என்றென்றும் எமது மனங்களில் நீங்காது நிலைத்து நிற்கும். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்!

அன்னாரின் பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்.

"மதவடி லேன்",
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். [7939]

## கண்ணீர் அஞ்சலி



### அமரர் முருகுப்பிள்ளை தம்பித்துரை
அவர்கள்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளை முன்னைநாள் பொருளாளரும், ஆரம்ப கால அங்கத்தவரும், சங்க வளர்ச்சியில் முன்னின்று உழைத்தவரும், பொதுச் சேவைகளில் அக்கறையுள்ளவருமாகிய அமரர் தம்பித்துரை அவர்களின் திடீர் மறைவு எமது சங்க வளர்ச்சிக்கு மட்டுமன்றி எமது சமூக சேவை நிறுவனங்களுக்கும் பேரிழப்பு. அன்னாரின் இழப்பில் துயருறும் குடும்பத்தினருடன் நாமும் இணைந்து கொள்கிறோம்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ் கிளை
உறுப்பினர்கள், அங்கத்தவர்கள்,
தொண்டர்கள், ஊழியர்கள்.

[இ-9258]

## மூன்றாம் வருட நினைவஞ்சலி



| பிறப்பு: | இறப்பு: |
| --- | --- |
| 08 — 10 — 1958 | 02 — 10 — 1991 |

### செல்வன் சண்முகநாதன் வசந்தன்
(யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவன்)

நினையாத நேரம் அணைந்த குல விளக்கே
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்தாலும்.
ஆறிடுமோ (வசந்தன்) எங்கள் உள்ளங்கள்.
மீண்டும் வரும் நினைவால் உருகுதே எங்கள்-
உள்ளங்கள்.
எந்நாளும் உங்களை எண்ணுகிறதே மனம்
ஆறாத்துயரில் எங்களை ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட அன்பு மகனே-
ஆசைச் சகோதரனே
உன் ஆத்மா சாந்தியடைய என்றும் -
பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உன் நினைவுடன் பிரிவைத் தாங்க முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும்:

அன்புள்ள அம்மா, பெரிய அக்கா,
லண்டனில் வசிக்கும் சின்ன அக்கா,
தங்கை (சிஞ்சி)
அத்தான்மார், மருமக்கள்,

திருமதி ச. சண்முகநாதன்,
இல. 130, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (33151)

# பெண்களின் அவல நிலைக்கு எதிராக குரல் எழுப்பிய கெய்ரோ உலக மாநாடு

பொதுவாக சாதாரண மக்கள் உலக மாநாடுகள் பற்றி அக்கறை செலுத்துவதில்லை. இந்த மாநாடுகளில் எடுக்கப்படும் முடிவுகள் இம் மக்களை விரைவிலோ பின்னரோ பாதிக்கும் என்ற போதிலும் இம் மாநாடுகளின் 'தத்துவத் தேடுதல்கள்' அவர்களின் கவனத்தை ஈர்ப்பதில்லை.

ஆனால் கடந்த மாதம் செப்ரெம்பர் 5 ஆம் திகதி முதல் 13 ஆம் திகதி வரை எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் நடைபெற்ற "சனத்தொகை, அபிவிருத்தி ஆகியன பற்றிய சர்வதேசிய மாநாடு" விசேஷமானதாக அமைந்தது.

இம் மாநாடு உலக ரீதியான கவனத்தைப் பெற்றது. மாநாட்டில் விவாதிக்கப்பட்ட விடயங்கள் வெளியேயும் கூரான விவாதத்தை எழுப்பின.

றோமன் கத்தோலிக்க வத்திக்கான் கருக்கலைப்புப் பிரச்சினை பற்றி இம் மாநாட்டின் இறுதிப் பிரகடனத்தில் எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பது தொடர்பாக பெரும்பான்மையோருடன் கருத்து வேற்றுமைகளைக் கொண்டிருந்தது. ஆனால் இறுதியில் இணக்கத்துக்கு வந்தது.

முஸ்லிம் நாடுகள் பாலியல் பிரச்சினைகளைப் பற்றிய நகல் பிரகடனத்தின் வாசகத்தைப் பிரயோகங்களைக் கடுமையாக ஆட்சேபித்தன.

உதாரணத்துக்கு, "திருமணங்களும் மற்றும் ஒன்று சேர்தல்களும்" "தம்பதிகளுக்கும் தனியாருக்கும் பாலியல் உரிமைகள்" ஆகியன போன்ற பிரயோகங்களை ஆட்சேபித்தன.

### நோக்கங்கள்

ஒன்பது நாட்களாக நடைபெற்ற இந்த மாநாட்டில் முஸ்லிம் நாடுகள், வளர்முக நாடுகள், செல்வந்த மேற்குநாடுகள், கத்தோலிக்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நகல் கமிட்டி 13ஆம் திகதி இறுதிப் பிரகடனத்தைத் தயாரித்து முடித்தது.

20 மாநாடு ஆண்டுகாலத்துக்கான சனத்தொகை பற்றிய குறிக்கோள் ஒன்றைத் தயாரித்து பெண்களுக்கான பாலியல் மகப்பேற்று உரிமைகளை அளிப்பதற்கான செயல் திட்டம் ஒன்றை அங்கீகரித்தது.

அடுத்த 20 ஆண்டு காலத்தில் உலக சனத்தொகையைக் கட்டுப்படுத்துவது தொடர்பான நிகழ்ச்சி நிரல் இம்மாநாட்டில் வகுக்கப்பட்டது.

குடும்பத் திட்டத்தைப் பிரகடனப்படுத்துவது. அது அபிவிருத்தியுடன் தொடர்புடையது என்பதை அங்கீகரிப்பது; பெண்களின் இன உறுப்பை வெட்டும் பழக்கத்திற்கான தடையை வைக்குவிப்பது— இவையே மாநாட்டின் நோக்கமாகவிருந்தது.

## பெண்களைப் பலியெடுக்கும் சட்டவிரோத கருக்கலைப்பைத் தடுக்க நடவடிக்கை

மகப்பேற்று உரிமைகளும் மகப்பேற்று சுகாதாரமும் இறுதிப் பிரகடனத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

மகப்பேற்று உரிமை தங்களுக்கு எத்தனை பிள்ளைகள் வேண்டும், எந்த இடைவெளிக்குள் குழந்தைகள் பிறக்க வேண்டும் என்பது பற்றி முடிவு செய்யும் அடிப்படை உரிமையை தம்பதிகளுக்கும் தனிநபர்களுக்கும் அளிக்கிறது.

2015 ஆம் ஆண்டளவில் உலக சனத்தொகை 727 கோடியாக இருக்கும். இன்று உலகின் சனத்தொகை 567 கோடியாகும். இத் திட்டம் தோல்வி கண்டால் 2015 ஆம் ஆண்டில் உலக சனத்தொகை 792 கோடியாகிவிடும். 2050 ஆம் ஆண்டில் 1250 கோடியாகும்.

பழமை பேண் முஸ்லிம் நாடுகளுக்கும் வத்திக்கானுக்கும் ஏற்புடைய முறையில் நகல் பிரகடனம் மாற்றியமைக்கப்பட்டது.

### குற்றச்சாட்டுகள்

உலக கத்தோலிக்கர்களுடன் இது விடயத்தில் பொதுவான கருத்தைக் கொண்டிருக்கும் முஸ்லிம் அடிப்படைவாதிகள் தன்னினச் சேர்க்கை, திருமண பந்தத்துக்குப் புறம்பான பாலியல் உறவுகள் என்பனவற்றை இக்கூட்டம் தூண்டுகிறது என்று குற்றஞ்சாட்டினார்கள்.

கருக்கலைத்தல் பற்றிய குறிப்புகள் கத்தோலிக்கர்களையும் பழமை பேண் முஸ்லிம்களையும் ஆத்திரமடையச் செய்தன.

சவூதி அரேபியா, ஈராக், சூடான், லெபனான் ஆகிய நாடுகள் மாநாட்டைப் பகிஷ்கரிப்புச் செய்தன.

சனத்தொகை மாநாடு உலக முஸ்லிம்களை நலிவடையச் செய்வதற்கான மேற்கு நாடுகளின் சதி, அது இஸ்லாத்துக்கு எதிரான மாநாடு என்றும் கூறப்பட்டது.

பாகிஸ்தானிலுள்ள இஸ்லாம் தீவிரவாதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட போதும் பிரதமர் பெனாசிர் பூட்டோ அதில் பங்குபற்றினார். அவரே மாநாட்டில் கலந்துகொண்ட ஒரே முஸ்லிம் பெண் பிரதமர். துருக்கி, பங்களாதேஷ் பிரதமர்கள் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

### ஆதரவுக் கருத்துகள்

கெய்ரோ சனத்தொகை மாநாட்டின் செயலாளர் நாயகமான பாகிஸ்தானைச் சேர்ந்த டாக்டர் நாபிஸ் சாதிக் முஸ்லிம் அடிப்படைவாதிகளால் எதிர்க்கப்படும் செயல் திட்டத்தை தீவிரமாக ஆதரித்தார்.

இது விடயத்தில் பாப்பரசருடன் இணக்கம் காணும் அடிப்படைவாதிகள் கெய்ரோ செயல் திட்டத்தின் கருக்கலைப்பினை எதிர்த்தனர். இது விபசாரம், தன்னினச் சேர்க்கை ஆகிய நடவடிக்கைகளை ஊக்குவித்து குடும்பக் கட்டுக்கோப்பை மதிப்பிழக்கச் செய்யும் என்றார்கள்.

ஏனையோர் உடன்பாடுகளை நடைமுறைப்படுத்தச் செய்யும் நிலைப்பாட்டுக்கு மாறாக மாநாட்டு நகல் செயல் திட்டம் கருக்கலைப்பை ஊக்குவிக்கவோ ஆதரிக்கவோ இல்லை என்று டாக்டர் சாதிக் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து வருகை தந்த 800 பிரதிநிதிகள் மத்தியில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக்கணக்கான பெண்களைப் பலியெடுக்கும் பாதுகாப்பற்ற கருச்சிதைவுகளை எதிர்கொள்வதே ஆலோசனைகளின் நோக்கம் என்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

கருக்கலைப்பை வத்திக்கான் இறுதியில் அனுமதித்துள்ளது.

### பெண்களின் அவலம்

பெண்களின் அவல நிலை பற்றி கெய்ரோ மாநாட்டில் விரிவாக ஆராயப்பட்டது.

பெண் என்ற ஒரே காரணத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான பெண்கள் மடிகின்றனர்.

மூன்றாம் உலக நாடுகளில் உள்ள கிராமங்கள், ஆசிய நாடுகளில் உள்ள விபசார விடுதிகள், அமெரிக்காவில் உள்ள பணிப்பாளர் சபை மண்டபங்கள் வரை பெண்களுக்கு எதிரான செய்கைகள் பரவலாகக் காணப்படுகின்றன.

கெய்ரோ மாநாட்டில் பெண்களின் சுகாதார விடயத்தை மனித உரிமைகள் விடயமாக எடுத்துக் கருத்துரைத்தார்கள்.

1993 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி அமைப்பின் பிரகாரம் ஆசியாவில் மாத்திரம் பெண் சிசுக் கொலை மற்றும் சிறந்த சுகாதார பராமரிப்பின்மையால் 10 கோடி சிறுமிகளும் பெண்களும் 'காணாமற்' போயுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் பல பெண் சிசுக்கள் பிறக்க முன்னரே மறைந்துவிடுவதாக இந்தியாவைச் சேர்ந்த வனிதா கஸ்டோகி தெரிவித்தார்.

பெற்றோர்கள் ஆண் குழந்தைகளை விரும்புவதால் குழந்தைகள் கர்ப்பத்தில் இருக்கும் போதே ஊடுருவிப் பார்க்கும் "ஸ்கானிங்" முறையால் என்ன குழந்தை என்பதைக் கண்டறிந்து பெண் குழந்தையாயின் கர்ப்பத்தை அழித்துவிடுவர்.

1978 ஆம் ஆண்டுக்கும் 1983 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 8,000 முதல் 10,000 பெண் சிசுக்கள் இந்தியாவில் கொல்லப்பட்டன.

இந்தியாவில் பால் தெரிவு முறையானது பெண்களுக்கு எதிரான வன்முறையாகும்; பாரபட்சமுமாகும் என்றும் அவர் தெரிவித்தார். ★

-பாரதிநேசன்-

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் மு. தம்பித்துரை
அவர்கள்
(முன்னாள் செயலாளர் Y. M. C. A. S. ஒன்றியம்- யாழ்ப்பாணம்.)


அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு அவரது மறைவால் துயருறும் மனைவி, மக்கள் உற்றார், உறவினர் எல்லோருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை செலுத்துகிறோம்.

ஒன்றியத்தின் அங்கத்தவர்கள்,

| | |
| --- | --- |
| யாழ்ப்பாண Y. M. C. A. | மானிப்பாய் Y. M. C. A |
| நாவலி Y. M. C. A. | காரைநகர் வத்துறை Y. M. C. A |
| உடுவில் Y. M. C. A. | யாழ்ப்பாணக் கல்லூரி Y. M. C. A. |
| பண்டத்தரிப்பு Y. M. C. A. | பருத்தித்துறை Y. M. C. A. |

(33144)

## 31 ஆம் நாள் நினைவில்



| ஈழத்தில் | வானத்தில் |
| --- | --- |
| 24 — 12 — 1951 | 02 — 09 — 1994 |

### அமரர் வைத்திலிங்கம் செல்வலிங்கம்
(சிறாப்பர் — கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்)

அன்பும் பாசமும் நிறைந்து பண்பின் உறைவிடமாக வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும் எமது துணைவரின் மரணச் செய்தி கேட்டு உடனே வந்து உதவிய அனைவருக்கும், இறுதிச் சடங்கின் போது நேரில் சமூகமளித்தவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

15, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

## பலிகளின் குரல் வானொலியில்

02 — 10 — 1994
ஞாயிறு இரவு

- ★ 8-01 — சிறப்பு நிகழ்ச்சி -க. சிவராசா எழுதிய "சாதனை படைத்த கட்டைக்காட்டுச் சமர்.
- ★ 8-20 — தாயகப்பாடல்கள்.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — தொடர் நாடகம்- பொன். கணேசமூர்த்தி எழுதிய "இலங்கை மண் 41ஆம் சங்கம்"

திங்கள் காலை
03 — 10 — 1994

- ★ 7-02—மாவீரவணக்கம்
- ★ 7-15 நிங்கள் கேட்டவை.
- ★ 7-30—செய்திகள்
- ★ 7-35— பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-40 நிங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## விவசாயிகள் ஓய்வூதியம்

யாழ்ப்பாணம், ஒக் 2
யாழ் மாவட்ட விவசாயிகளின் ஆவணி, புரட்டாதி மாதங்களுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை சமந்தொழில் காப்புறுதிச் சபை மாவட்ட காரியாலயத்தில் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது (ஓ)

**A/L MATHS**

Mr. குணசிங்கம்
B. Sc (Hons)

மீட்டல் வகுப்பு
இன்று ஆரம்பம்
**02-10-94** ஞாயிறு
12.30 p.m.

**P - NEW SCIENCE CENTRE**
எழிலகம் முன்
யாழ்ப்பாணம். [இ-9859]

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

### பத்மநாதன் பிரதீபன்
(யாழ். மத்திய கல்லூரி மாணவன்)

கடந்த 04—09—1994 அன்று விபத்துக்குள்ளாகி மரணமடைந்த எமது அன்புச் செல்வனின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அனைவருக்கும், இறுதிச்சடங்கின் போது மலர்வளையம், மாலை, அஞ்சலித்துண்டுப் பிரசுரம் ஆகியவை மூலம் கௌரவித்தவர்களுக்கும், நேரில் சமூகம் அளித்தவர்களுக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும், இறுதி ஊர்வல அணிவகுப்பு நடாத்திச் சென்ற யாழ். மத்திய கல்லூரியினருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (02-10-94) கல்லூண்டாய் தீர்த்தக்கரையில் நடைபெறவிருக்கும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் நாளை 03-10-94 இல் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

குடும்பத்தினர்

இல. 90, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (33159)

## 2ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
| --- | --- |
| 12 — 04 — 1937 | 23 — 09 — 1992 |

### திருமதி பூமலர் ஐயாத்துரை
திதி **02 - 10 - 1994**

அணைந்தும் அணையாத சோதியாய் அன்பு, பண்பு, பாசம் என்ற முக்குணங்களிலும் சிறந்து வாழ்ந்து அருட்பெருஞ் சோதியில் சங்கமித்த எமது அன்னையே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள்

நாவலர் சந்தி. (33158)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் பரவும் கொள்ளை நோயினால் முழு உலக நாடுகளுமே நெருக்கடியில்!

கொள்ளை நோய் எனப்படும் பிளேக் நோய் (Plague) இந்தியாவின் மேற்கு மாநிலங்களில் பரவி வருகிறது.

இந்தியாவை மட்டும் அல்ல இந்தியாவுடன் தொடர்புகளை வைத்துள்ள முழு உலக நாடுகளையுமே பீதிக்கு உள்ளாக்கியிருக்கிறது இந்த கொள்ளை நோய்.

ஏற்கனவே பிரிட்டனில் எட்டுப்பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் நரசிம்மராவ் அரசு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கி வருகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

குஜராத் மாநிலத்தின் சூரத் (Surat) நகரில் இந்த நோய் முதலில் கண்டுபிடிக்கப்பட்டது.

குஜராத் நகரங்களில் சன நெருக்கடி அதிகமான உள்ள நகரம் சூரத்.

வைரக்கல், காஞ்சிபுரம் சேலைக்குப் பெயர்போன இந்த நகரில் சுமார் 20 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள்.

சமீபத்தில் இங்கு பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தது. கால்நடைகள் பெருமளவில் இறந்து சுகாதாரத்துக்குப் பங்கம் ஏற்பட்டது. நோய்த்தொற்றுக்கு இது வாய்ப்பாகி விட்டது.

கொள்ளை நோய் பரவ ஆரம்பித்தவுடன் சுமார் 5 லட்சம் மக்கள் பீதியினால் இங்கிருந்து வெளியேறி விட்டனர். மகாராஷ்டிரம், டில்லி உட்பட மேலும் ஐந்து மாநிலங்களில் நோய் பரவுவதற்கு

## வெளி உலகம்

இவர்களே பிரதான காரணம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சூரத்துக்கு வெளியே தலைநகர் புதுடில்லியில் இருவர் மரணம் அடைந்துள்ளனர். சூரத்தில் மரணமானோர் நூற்றுக்கும் அதிகம் என்று அஞ்சப்படுகிறது.

### நோய்த் தடுப்பு நிலையங்கள்

கொள்ளை நோய் பரவுவதைத் தடுப்பதற்காக இந்திய மாநிலங்கள் நோய்த் தடுப்பு நிலையங்களை அமைத்துள்ளன.

டில்லியில் விமான நிலையம், ரயில் நிலையம், மாநிலங்களுக்கிடையில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் தரிப்பு நிலையம் ஆகியவற்றில் இப்படியான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நோய் பரவும் மாநிலங்களில் இருந்து கணிசமான தூரத்தில் உள்ள தமிழ்நாடும் நோய்த்தடுப்பு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கொள்ளை நோயின் மையப்பகுதியாகக் கருதப்படும் சூரத் நகர் அமைந்துள்ள குஜராத் மாநிலத்துடன் எல்லையைக் கொண்டிருக்கும் ராஜஸ்தான் மாநிலம் குஜராத்தில் இருந்து உணவுப் பொருட்கள் வருவதை ஒரு வாரத்துக்கு தடை செய்துள்ளது.

பல இந்திய மாநிலங்களில் பாடசாலைகள், சினிமாக் கொட்டகைகள் மூடப்பட்டு விட்டன. சனங்கள் கூடுவதைத் தவிர்ப்பதற்காக பொதுக் கூட்டங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இந்த நோய் பரவும் முறையும் அதன் தன்மைகளுமே மக்கள் பீதியடையக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.

நோய்க்குச்சிகிச்சை அளித்த டாக்டர்களில் ஏழு பேரும் தாதிகளில் இரண்டு பேரும் இதுவரை இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். நோய்த் தொற்றுக்கு இவர்கள் ஆளாகி விட்டனர்.

இதனால் உயிர் தப்பினால் போதும் என்ற நினைப்பில் மக்கள் சூரத் நகரில் இருந்து வெளியேறி வருகின்றனர்.

### மனித குண்டுகள்

நோய் அறிகுறி காரணமாக சூரத்தில் உள்ள சிவில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் நூற்றுக்கும் மேலானவர்கள், நோய் சிகிச்சைக்கு முன்னரே தப்பிச் சென்று விட்டனர் என்று மற்றும் ஒரு செய்தி தெரிவிக்கிறது.

தப்பிச் சென்றவர்களை ''மனித குண்டு''கள் (Human-Bombs) என்று வர்ணித்த இந்திய சுகாதார அதிகாரிகள் பாரா இராணுவத்தினரின் உதவியுடன் தேடுதல் நடத்த வேண்டியதாயிற்று. இவர்களில் நால்வரை மட்டுமே மீளவும் பிடிக்க முடிந்தது.

கொள்ளை நோய் கட்டுப்பாட்டின் கீழ் வந்து கொண்டிருப்பதாகவும் இது கடுமையான நோய் அல்ல என்றும் இந்திய அரசு கூறுகிறது.

உலக நாடுகளில் இந்தியாவுக்கு இருந்து வரும் அந்தஸ்தையே கேள்விக்குறி ஆக்கிய இந்த நோய் இந்தியாவுக்கு பலகோடி டொலர் இழப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது.

கொழும்புக்கும் பம்பாய், டில்லிக்கும் இடையிலான எயர்லங்கா விமானச் சேவையை இலங்கை அரசு இடைநிறுத்தி விட்டது. அதே போன்று பாகிஸ்தான் அரசும் விமானச் சேவையை நிறுத்தி விட்டது.

இலங்கையில் 1938ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொள்ளை நோய் கண்டறியப்படவில்லை.

கொள்ளை நோய் பீதி காரணமாக இந்திய சரக்கு விமானங்களுக்குக்கூட சில மத்திய கிழக்கு நாடுகள் தடை விதித்து விட்டன.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்தியர்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே அந்த நாடுகளுக்குள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

வெளிநாடுகள் இந்த நோயை மிகைப்படுத்தி பிரசாரம் செய்வதாக இந்திய நிதி அமைச்சர் மன்மோகன் சிங் கண்டனம் தெரிவித்துள்ளார்.

### பலகோடி நட்டம்

இவற்றை எல்லாம் விட இந்தியாவின் உல்லாசப் பய

## பலகோடி டொலர் இழப்பு அரசுக்கு பெரும் சவால்!!

ணிகள் துறையிலும் பெரும் இழப்பும் ஏற்பட்டுள்ளது

ஏற்கனவே பதிவு செய்து கொண்டிருந்த உல்லாசப் பயணிகளில் பலர் தமது பதிவுகளை ரத்துச் செய்து விட்டனர் என இந்தியாவின் பிரபல உல்லாசப் பயணிகள் முகவர் நிலையமான சித்தா வேல்ட் ரவல்ஸ் தெரிவிக்கிறது.

பொருட்கள் வாங்க இந்தியா வர இருந்த வெளிநாட்டு வர்த்தகர்கள் பலரும் தமது பயணத்தை ரத்துச் செய்து விட்டனர்.

சூரத்திலும் மற்றும் நோய் பரவும் ஏனைய நகரங்களிலும் தொழிற்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டன.

சூரத்தில் மட்டும் தினமும் உற்பத்தி இழப்பு ஒருகோடி 70 லட்சம் டொலர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

### கொள்ளை நோய்களில் மூன்று வகை

மனிதருக்குத் தொற்றும் கொள்ளை நோய்கள் மூன்று வகையானவை.

★ ஒன்று Bubonic plague (பியூபொனிக் பிளேக்)

இந்த நோய் கண்டவர்களுக்கு நிணநீர்க்கலன் தொகுதியில் (Lymph nodes) வீக்கம் ஏற்படுகிறது.

தொடை இடுக்கு, கை இடுக்குகளில் கட்டி ஏற்படுகிறது. கூடுதலானோர் இந்த வகை கொள்ளை நோயினாலேயே பாதிக்கப்படுகின்றனர்.

குலைப்பன், வாந்தி, தலைவலி, மயக்கம், வெளிச்சத்தைப் பார்க்க முடியாமை முதுகு நோவு, அங்க நோவு, நித்திரையின்மை ஆகியவை இதன் ஆரம்ப அறிகுறிகள்.

நோய்கண்ட ஒருவரின் உடல் வெப்ப நிலை 104 பாரன்ஹீட் வெப்பத்துக்குமேல் செல்கிறது.

நோய் கண்ட இரண்டாவது மூன்றாவது நாட்களில் டிலிறி குறைகிறது மலச்சிக்கலும் ஏற்படும் வயிற்றோட்டம் ஏற்பட்டால் நோய் கடுமை என அர்த்தமாகிறது. இது எலித் தெள்ளில் இருந்தே மனிதருக்குத் தொற்றுகிறது. நோய் தொற்றி அதன் அறிகுறி வெளியே தெரியும் காலம் 3 முதல் 6 தினங்கள் ஆகும், சில சமயம் 10 தினங்களும் செல்லலாமாம்.

★ மற்றது Pneumonic Plague (நிமோனிக்க பிளேக்)

இந்த வகை கொள்ளை நோய் சுவாசப்பையைத் தாக்குகிறது.

சுவாசம், எச்சில் ஆகியவை மூலம் இந்த நோய் தொற்றுகிறது.

உரிய நேரத்தில் சிகிச்சை செய்யப்படாவிடில் இந்த நோய் கண்டவர்களுக்கு மூன்று அல்லது நான்கு தினங்களில் மரணம் சம்பவிக்கிறது.

★ மூன்றாவது Septicemic Plague — (செப்ரிசீமிக் பிளேக்)

இந்த வகை கொள்ளை நோய் இரத்தத்தைப் பாதிக்கிறது.

நோய் கண்டவர்களுக்கு மலட்டுத் தன்மை. மூளைச் சிதைவு ஏற்படுகிறது உடனடியாகச் சிகிச்சை செய்யப்படாவிடில் 24 மணி நேரத்தில் மரணம் சம்பவிக்கிறது.

மேற்கண்ட மூன்று வகையான கொள்ளை நோய்களில் Bubonic Plague மற்றும் Pneumonic Plague ஆகிய இரண்டுமே தற்போது இந்திய மாநிலங்களில் பரவி வருகின்றன.

பியூபொனிக் கொள்ளை நோய் பின்னர் நிமோனிக் நோயாகவும் மாற்றம் அடைகிறது. இந்த முதல் இரண்டு அறிகுறிகள் தென்படாமலேயே செப்ரிசீமிக் நோயினால் நேரடியாக பாதிக்கப்படுவோரும் உண்டு.

### ஆரம்ப அறிகுறி இருமல், காய்ச்சல்

கொள்ளை நோயின் ஆரம்ப அறிகுறிகள் இருமலும், காய்ச்சலும்.

இந்த அறிகுறிகள் உள்ளவர்கள் உடனடியாக சிகிச்சை பெற்றால் உயிர் தப்பிவிட முடியும் என்று இந்திய மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாளுக்கு ஒரு கிராம் வீதம் 5 நாட்களுக்கு ரெட்றாசைக்ளின் (Tetracycline) உட்கொள்ளுமாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

Streptomycin, Tetracycline, Chloramphenicol, Sulphonamides ஆகிய மருந்துவகைகள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நோய் அறிகுறி கண்டவர்கள் மருத்துவ பரிசோதனை அறிக்கை வரும்வரை காத்திருக்கக்கூடாது. உடனடியாக மேற்கண்ட ''அன்றிபயாடிக்'' மருந்து வகைகளை உட்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### எலி மூலமே பரவுகிறது

கொள்ளை நோய் Yersinia Pestis என்ற பக்றீரியா கிருமியினாலேயே ஏற்படுகிறது.

இந்த நோயைப் பரப்பும் பிரதான பிராணி எலி ஆகும். மற்றும் இதே குடும்பத்தைச் சேர்ந்த முயல், அணில் ஆகியவையும் கொள்ளை நோயைப் பரப்பக்கூடியவை.

தெள்ளு, உண்ணி ஆகியவை இந்த நோய்க்காவிகள்.

கிறிஸ்துவுக்கு முன் 1500—600 ஆண்டுகளிலேயே இந்த நோய் இந்தியாவில் இருந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எலி ஒன்று கூரையில் இருந்து கீழ விழுந்து துடித்திறந்தால் அந்த வீட்டில் உள்ளவர்கள் உடனடியாக வெளியேறிவிட வேண்டும். என்று இந்தியாவின் புராதன நூல்கள் தெரிவிப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த பயங்கரகொள்ளை நோய் எலிகளில் இருந்து தெள்ளு, உண்ணி ஆகியவற்றுக்குப் பரவுகிறது அதே போன்று நோய்க்கிருமி உள்ள தெள்ளு அல்லது உண்ணி எலிகளில் ஏறும்போது புதிதாக எலிகளுக்கு ஏற்படுகிறது.

நோய்கண்ட எலிகள் பெருமளவில் இறக்கும் போது தெள்ளு அல்லது உண்ணி வெளியேறி மனிதனுக்கு தாவும் போது அது மனிதர்களுக்கும் ஏற்படுகிறது.

1889—1950ஆண்டு காலத்தில் கொள்ளை நோய் காரணமாக இந்தியாவில் ஒரு கோடி 25லட்சம் பேர் இறந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

### கறுப்புமரணம்

வரலாற்றுக் காலத்தில் இந்த நோய்க்குப் பெயர் ''கறுப்பு மரணம்'' (Black Death)

பலநூற்றாண்டு காலமாக ஐரோப்பா, மத்திய ஆசியா, சீனா ஆபிரிக்கா, அமெரிக்கா, இந்தியா, தென்கிழக்கு ஆசியா, நாடுகளில் கொள்ளை நோயினால் மரணங்கள் ஏற்பட்டுள்ளன.

14ஆம் நூற்றாண்டில் — இந்த நோய்க்கு சரியான மருந்து கண்டு பிடிக்காத காலத்தில் ஐரோப்பாவில் மட்டும் இரண்டரைக் கோடி மக்கள் இறந்து போனார்கள் அப்போதைய ஐரோப்பிய சனத்தொகையில் இது நாலில் ஒருபங்கு என்று தெரிவிக்கப்படுகிறது.

1664—1665 இல் லண்டனில் ஏற்பட்ட கொள்ளை நோயின் போது 70 ஆயிரம் பேர் இறந்தார்கள். அப்போது லண்டன் சனத்தொகையே 4 லட்சத்து 60 ஆயிரம் மட்டுமே.

1894 இல் தென் சீனாவின் கன்ரன் நகரிலும், ஹொங்

**சஞ்சாரன்**

ஹொங்கிலும் ஏற்பட்ட கொள்ளை நோயினால் 80 ஆயிரம் முதல் ஒருலட்சம் பேர் வரை இறந்தனர்.

தற்போது கொள்ளை நோயைக் கட்டுப்படுத்துவதற்கு புதிய மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன.

ஆனால் இந்த நோயை முற்றாக அழிக்கா விட்டால் தற்போதைய மருந்துகளுக்கும் நோய்க்கிருமிகள் பழக்கப்பட்டு விடும் என்று வைத்திய நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

WHO என அழைக்கப்படும் உலக சுகாதார நிறுவனத்தின் நோய் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கொள்ளை நோய் இன்னும் உலக நாடுகளில் இருந்து வருகிறது.

1980 களில் 6,433 கொள்ளை நோய் தகவல்கள் உலக சுகாதார நிறுவனத்துக்குக் கிடைத்திருந்தன அதில் 720 பேர் இறந்தனர்

உலகில் மிக ஆபத்தான நோய்களாகக் கருதப்படும் மூன்று நோய்களில் கொள்ளை நோயும் ஒன்றாகும்.

பொதுவாக காட்டுப் பகுதிகளிலேயே இந்த நோய் காணப்படுகிறது.

இந்த நோய்கண்ட எலிகள் இறப்பது அல்லது செறிவுகள் அழிவுகள் காரணமாக நகரப் பகுதிகளுக்குள் வரும் போது எலித் தெள்ளு அல்லது உண்ணி மூலம் நோய் மனிதருக்கும் பரவுகிறது காடுகளுக்குச் செல்பவர்களும் இந்த நோய்த் தொற்றுக்கு உள்ளாகிறார்கள். நகரப் பகுதிகளுக்குள் நோய் பரவும் போது பெரும் உயிர்ச்சேதங்கள் தவிர்க்க முடியாதவை ஆகின்றன. ★

**பம்பாயில் எலிகளை ஒழிக்க தென் ஆபிரிக்க நச்சு வாயு**

இந்தியாவின் பம்பாய் நகரின் சேரிப்பகுதிகளில் மட்டும் லட்சக்கணக்கான எலிகள் உள்ளன. முழு பம்பாய் நகரத்தின் 1கோடி 30லட்சம் சனத் தொகையில் அரை வாசிப்பேர் சேரிப்பகுதிகளிலேயே வாழ்கிறார்கள். இங்குள்ள எலிகளை ஒழிப்பதற்காக தென் ஆபிரிக்காவில் இருந்து CYANO GAS என்ற நச்சுவாயுவை தருவிப்பதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. இந்த நச்சுவாயு தென் ஆபிரிக்க வைரச் சுரங்கங்களில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

சூரியகாந்தி உதயன் ஞாயிறு சிறப்பகம்

# அயர்லாந்துப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் சமாதான முயற்சி வெற்றி தருமா?

ஐ.ஆர்.ஏ எனப்படும் ஐரிஷ் குடியரசு ராணுவம் யுத்த நிறுத்தம் செய்து ஒரு மாதம் கழிந்துவிட்டது.

ஓகஸ்ட் 31 ஆம் திகதி யுத்த நிறுத்தப் பிரகடனம் வெளிவந்தது.

25 வருடகால அயர்லாந்துப் பிரச்சினையில் இது ஒரு பெரும் திருப்பு முனையாக அப்போது இதுகருதப்பட்டது.

ஆனால் ஒரு மாதம் கழிந்தும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவில்லை. பிரிட்டன் தயக்கம் காட்டி வருகிறது.

இந்தப் பிரச்சினையில் கத்தோலிக்கர்களையும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களையும் திருப்தி செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு பிரிட்டனிடம் இருந்து வருகிறது

ஐ. ஆர். ஏயின் அரசியல் பிரிவான சின் பெய்ன் (Sinn-Pein) புரட்டஸ்தாந்து தீவிரவாதிகளின் அமைப்பான யூ. டி. ஏ. எனப்படும் உல்ஸ்ரர் பாதுகாப்பு ஸ்தாபனம் (Ulster Defence Association) உட்பட பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகலருடனும் நடத்தப்படும் பேச்சுவார்த்தையே இறுதித்தீர்வாக இருக்கும்.

### சமாதான முயற்சியை மழுங்கடித்த கடும் போக்கு

கத்தோலிக்கர்களுக்கும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களுக்கும் சம்பந்தப்பட்ட வட அயர்லாந்துப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக கடந்த காலங்களில் எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஆனால் ஐ ஆர் ஏயின் குண்டுத் தாக்குதல்களினால் இந்த முயற்சிகள் பலனற்றுப் போயின.

ஐ. ஆர். ஏ. வன்முறைகளைக் கைவிட்டாலன்றி அதனுடன் எந்த வித பேச்சுக்களையும் நடத்தப்போவதில்லை என்று பதவிக்கு வந்த பிரிட்டிஷ் அரசாங்கங்கள் தெரிவித்து வந்தன.

பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்புகளை இது மழுங்கடித்து வந்தது.

## ஐ.ஆர்.ஏயின் யுத்த நிறுத்தம் நீடிக்கிறது பேச்சுக்களை ஆரம்பிக்க மேஜர் தயக்கம்

### 1993 டிசம்பர் பிரகடனம்

கடைசியாக 1993 டிசம்பரில் லண்டனில் பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலமான 10 டவுனிங் வீதியில் வெளியிடப்பட்ட ஐரிஷ்—பிரிட்டிஷ் பிரதமர்களின் கூட்டுப் பிரகடனம் ஒன்றே முட்டுக்கட்டை நிலையைத் தளர்க்க உதவியது

பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரும் (John Major) ஐரிஷ் பிரதமர் அல்பேர்ட் ரெனோல்ட்ஸும் (Albert Reynolds) கூட்டாக வெளியிட்ட இந்த பிரகடனத்தில்

ஐ. ஆர். ஏ. வன்முறைகளை கைவிடவேண்டும் என்றும்—

சின்பெய்ன் உட்பட பிரச்சினையில் சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் அடங்கிய சமாதான மாநாடு ஒன்று கூட்டப்பட வேண்டும் என்றும் — தெரிவிக்கப்பட்டிருந்தது.

### பிரகடனத்தின் பின்பும் தாக்குதல்

ஆனால் கடந்த டிசம்பரில் கூட்டுப் பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னரும் ஐ. ஆர். ஏ வடஅயர்லாந்திலும் லண்டனிலும் பல குண்டுத் தாக்குதல்களை நடத்தி இருந்தது.

உலகின் சுறுசுறுப்பான விமான நிலையங்களில் ஒன்றான லண்டன் ஹீத்ரோ விமான நிலையம் கூட ஐ. ஆர். ஏயின் றொக்கெட் தாக்குதலுக்கு இலக்கானது.

இதனை அடுத்து ஐ ஆர். ஏயை வன்முறைகளைக் கைவிடச் செய்யும் முயற்சிகள் கடந்த 8 மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்தன.

ஐ. ஆர். ஏ. வன்முறை[illegible]களைக் கைவிட்[illegible] [illegible]ஹுடன் பேச்சு நடத்துவதில்லை என்று அறிவித்த பிரிட்டிஷ் அரசு கூட கடந்த சில மாதங்களாக இரகசியமாக ஐ. ஆர். ஏயுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டது

ஏற்கனவே மத்திய கிழக்கிலும், தென் ஆபிரிக்காவிலும் சமாதானம் ஏற்பட பெரும் பங்கு வகித்த அமெரிக்காவும் ஐ ஆர். ஏக்கு நெருக்குதல்களைக் கொடுத்து வந்தது.

### ஐரிஷ்—அமெரிக்கா சமாதானக்குழு

இறுதியாக கடந்த ஒகஸ்ட் பிற்பகுதியில் ஐரிஷ்—அமெரிக்க சமாதானக்குழு ஒன்று சின் பெய்ன் தலைவர் ஜெரி அடம்ஸை (Gerry Adams)

**- செய்திலோலன் -**

வட அயர்லாந்தின் தலைநகர் பெல்பாஸ்டில் சந்தித்து பேச்சுக்களை நடத்தியது.

புரூஸ் மொரிசன் (Bruce Morrison) என்பவர் தலைமையிலான அரசியல் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள் [illegible] குழுவுடனான இரண்டரை மணி நேர பேச்சுவார்த்தையின் பின்னர் ஐ. ஆர். ஏயின் யுத்த நிறுத்த அறிவிப்பு வெளிவந்தது.

### புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் சந்தேகம்

1993 டிசம்பர் கூட்டுப் பிரகடனத்தின் பின்னரும் அதனை ஏற்க மறுத்து தொடர்ந்து வன்செயல்களில் ஈடுபட்டு வந்த ஐ ஆர். ஏ திடீரென யுத்த நிறுத்தத்துக்கு இணங்கியது. வட அயர்லாந்தில் உள்ள புரட்டஸ்தாந்து மதத்தினர் மத்தியில் தற்போது சந்தேக உணர்வை ஏற்படுத்தி இருக்கிறது.

யுத்த நிறுத்த அறிவிப்புக்கு கைமாறாக ஐ ஏக்கு பிரிட்டன் பல சலுகைகளை வழங்க ஒப்புக் கொண்டிருக்கலாம் என்று புரட்டஸ்தாந்து தீவிரவாதிகள் கருதுகிறார்கள்.

### கத்தோலிக்கர் சிறுபான்மையினர்

வட அயர்லாந்தில் மூன்றில் இரண்டு பங்கினர் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் ஏனையோர் கத்தோலிக்கர்கள்.

வட அயர்லாந்து பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருந்து விடுபட வேண்டும் என்றும்— கத்தோலிக்க நாடான ஐரிஷ் குடியரசுடன் இணைய வேண்டும் என்றும் — வட அயர்லாந்தில் உள்ள சிறுபான்மை கத்தோலிக்கர்கள் கோருகிறார்கள். இவர்களுக்கு ஆதரவாக ஐ. ஆர் ஏ போராடி வருகிறது.

அதே சமயம் வட அயர்லாந்தில் உள்ள புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் வட அயர்லாந்து தொடர்ந்து பிரிட்டனின் கீழ் இருக்க வேண்டும் என்று கோருகிறார்கள்.

பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக ஆயுதம் தூக்கி உள்ள ஐ ஆர் ஏக்கு எதிராக புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் உல்ஸ்ரர் பாதுகாப்பு ஸ்தாபனம் போராடுகிறது

### 3.000 பேர் பலி

கத்தோலிக்கர்களின் ஐ. ஆர். ஏ இயக்கமும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் உல்ஸ்ரர் பாதுகாப்பு ஸ்தாபனமும் கடந்த காலங்களில் ஏட்டிக்குப் போட்டியாக நடத்திய குண்டுத் தாக்குதல்களிலும் வன்முறைகளிலும் சிவிலியன்கள், படைவீரர்கள், போராளிகள் உட்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ. ஆர். ஏயின் குண்டுத் தாக்குதல்கள் வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் வாழும் பகுதிகளை மட்டும் அல்ல பிரதான பூமியான பிரிட்டனையும் அதிர வைத்தன.

### துண்டாடப்பட்ட அயர்லாந்து

வட அயர்லாந்தும் ஐரிஷ் குடியரசும் அயர்லாந்து என்ற பெயரில் பிரிட்டனின் கீழ் ஒரே நாடாகவே இருந்தன.

1920ஆம் ஆண்டு வேல்ஸ், ஸ்கொட்லாந்து போன்று வட அயர்லாந்தும் ஐக்கிய ராஜ்யத்தின் ஓர் அங்கமாக இணைக்கப்பட்டது.

கத்தோலிக்கர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அயர்லாந்துக்கு பிரிட்டன் சுதந்திரம் கொடுப்பதை அயர்லாந்தின் வடபகுதியில் வாழும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் அப்போது எதிர்த்ததே அயர்லாந்து துண்டாடப்படுவதற்குக் காரணமாக இருந்தது.

1921ஆம் ஆண்டு தென் அயர்லாந்துக்கு பிரிட்டன் சுதந்திரம் வழங்கியது. தென் அயர்லாந்தே அல்பேர்ட் ரெனோல்ட்ஸை பிரதமராகக் கொண்ட தற்போதைய ஐரிஷ் குடியரசு ஆகும்

1950—60 ஆம் ஆண்டுகளில் வடஅயர்லாந்தில் ஐ. ஆர். ஏ. சிறிய, சிறிய தாக்குதல்களை நடத்தியது. ஆனால் வட அயர்லாந்தில் வாழும் கத்தோலிக்க மக்களிடமிருந்து ஐ. ஆர். ஏக்கு அப்போது போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

### 1960இற்கு பின் சாதக நிலை

ஆனால் 1960ஆம் ஆண்டுக்குப் பின்னர் வட அயர்லாந்தில் ஐ ஆர்.ஏக்கு சாதகமாக நிலைமை மாறியது.

கத்தோலிக்கர்களுக்கு பாகுபாடு காட்டும் சட்டங்களை புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வட அயர்லாந்து ஆட்சி மன்றம் நிறைவேற்றியதை ஐ. ஆர். ஏ தனக்கு

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: திருமதி விமலா துரைராஜா, சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், 19, பண்டாரக்குளம் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். (33076)

"Roma" Gents Bicycle தொடர்பு கொள்ளவும்: கண்ணன் கொலீஜ், கச்சேரி கழக வீதி, திருநெல்வேலி. [33115]

ஓடை வைக்க உகந்த சிங்கர், பிரமர், போஸ்லீஸ், சுழுந்தான் சிங்கர் செப் பிளறட், பாப்டிகல் முட்டைகள் உடன் விற்பனைக்கு உண்டு. ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 8-00 மணிக்கு முன் பெற்றுக்கொள்ளலாம். இல. 11, செட்டித்தெரு, ஒழுங்கை, நல்லூர். [33148]

காரைநகர் வீதி நாவாந்துறை கடற்கரை மாதா கோவிலடியில் 8 பரப்பு காணி விற்பனைக்குண்டு. காலை 8 மணிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். B. R. இரஞ்சன் 19/1. B A. தம்பி ஒழுங்கை, வண்ணார் பண்ணை. (33143)

உடைந்த பாக்மா வகை (500 பைக்கட்) சிக்கல், சோப்லைக, பிளாஸ்ரிக் வாளி, கோழித்தீன் ஆகியன 03-10-94 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு யாழ்ப்பாணம் கிறாம்பியடி மணியம் கட்டடத்திலுள்ள சங்கத்தின் இவை யில் ஏல விற்பனை செய்யப்படும். புங்குடுதீவு, நயினாதீவு ப. நோ. கூ. சங்கம். (33145)

## இறைச்சிக்கோழி விற்பனை

சகல இன இறைச்சிக் கோழிகள், தினமும் குறைந்த விலையில் காலை 7-00 தொடக்கம் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [33026]

## வான்கோழி விற்பனைக்கு

முட்டையிடும் பலநிற வான்கோழிகளும் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு தனித்தனியாகவும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய இடம்; "இறைச்சிக்கோழி விற்பனை நிலையம்", இல. 15/7. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தி, நல்லூர். [33129]

## கோழிக்குஞ்சு விற்பனை

Prima Hyline Brown சிவப்பு முட்டைக்குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. Prima Broiler குஞ்சுகள் பதிவு செய்து 08-10-94 சனிக்கிழமை பெற்றுக்கொள்ளலாம் நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33126)

## வீடு வளவு விற்பனைக்கு

சாவகச்சேரி நவீன சந்தையில் இருந்து 100 யார் தூரத்தில் டச்சு வீதியில் நல்ல நிலையிலுள்ள வீடுவளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: அரசரத்தினம், நிலவளவை யாளர். [சி-9251]

## மில் விற்பனைக்கு

"மில்" விற்பனைக்கு இறைண்ட்டர் - 2, கல்லர் இல. 7, சோமசிறி, லிஸ்ரர் எஞ்ஜின் புதிதாக சீரமைக்கப்பட்டது. தொடர்பு: விநாயகம் மில், பிரதான வீதி, சங்கானை (33140)

## மணமக்கள் தேவை

குற்றமற்ற 35, 37, T.A க்கும், 34 வயது டாக்டருக்கும் பிரான்ஸிலுள்ள சுத்தோ லிக்க 33, 35 மணமகனுக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (33133)

## தேவை

புதிய சரம் போடக் கூடடியவர் தேவை. வைத்திருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும். Y.M.H.A. கோண்டாவில். (33134)

Prima கோழித்தீன் வியாபாரத்திற்கு மொத்தமாக தேவை. தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர், 19. முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33147)

## மணப்பெண் தேவை

34 வயது U. K. எஞ்ஜினியருக்கு [8 செவ்வாய் மூலம் 5 அடி 10 அங்] பெற்றோர் பெண்ணைத் தேடுகின்றனர், இங்கு வந்து திருமணம் செய்வார். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். (33132)

## மணிக்கூடுகள் தேவை

பழைய சுடிகாரங்கள் மேசை மணிக்கூடுகள், சுவர் மணிக்கூடுகள் நியாய விலைக்கு வாங்கப்படும். மணிக்கூடுகள் அனைத்தும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். நீலன் வாச்வேக்ஸ், 113, பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம். [சி-9377]

## A/L - 95

A/L 95 பரீட்சைக்கு உதவியாக வெளிவந்து விற்பனையாகின்றது A/L வகுப்புக்குரிய மனித உயிரியல் (Human Biology) உயர்தர, விலங்கியல் (பரீட்சை வழிகாட்டி) ஆக்கம் M. P. Sellavel B. Sc. சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம். மகிமலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம். ஸ்ரீகாந்த் புத்தகசாலை, யாழ். நல்லூர். (சி/9177)

## திருமண சேவை

எம்மிடம் எல்லா மதத்தவர்களுக்கும், உள்நாடு, வெளிநாடு சகல உத்தியோகங்களிலும் மணமக்கள் உண்டு. முழுவிவரங்களுடனும், புகைப்படத்துடனும் தொடர்பு கொள்ளவும். திருமுருகன் திருமண சேவை, கோப்பாய்-மானி. வீதி, கைதடி (A.P.C. அருகில்) (33077)

## ஆண்டு 4 5

ஆண்டு 4 ற்கு புலமைப் பரிசில் 1995 மாதிரி வினாத்தாள்கள் 8-10-94 ஞாயிறு வெளியிடப்படும். ஆண்டு 5 மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளின் மாதிரி வினாத்தாள்கள் 01-10-94 சனி வெளியிடப்பட்டது. மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (33142)

## வடமராட்சியில் நீமியா

அம்பன், புலோலி கமநல சேவை நிலையங்களில் நீமியா உரம் விற்பனையாகின்றன. பயிர் பாதுகாப்புக்கும், அமோக விளைச்சலுக்கும் வாங்கிப் பயன்படுத்துங்கள் மில்க்வைற். (சி-9376)

---

**BECON**

ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்

**SPOKEN ENGLISH**
With
**GRAMMAR**
By
தெய்வதவபாலன்
ஆரம்பம்
**3 - 10 - 94**
திங்கள் காலை 11 00 மணி
[சி 9249]

---

## இசை நிகழ்ச்சி

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இன்று (02-10-94) ஞாயிறு மாலை 4 மணிக்கு நடைபெறும்.

பாட்டு — திருமதி நா. மகாலிங்கம்
வயலின் — திருமதி யோ. கதிரவேலு
மிருதங்கம் — திரு. துரைராசா

[7929]

---

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



## செல்வி ம. பிரவீனா

இணுவில் கிழக்கைச் சேர்ந்த ஜேர்மனியில் வசிக்கும் மகேந்திரன் - சசிகலா தம்பதிகளின் செல்வப்புதல்வி செல்வி பிரவீனா

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (02-10-1994) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனி இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறார்

இவரை ஜேர்மனியிலுள்ள அன்பு அப்பா, அம்மா, அண்ணன்மார் பிரசாந், பிரசன்னா, உதயன்மாமா, மாமி, உதயசாந் மச்சான், ஜெயா சித்தப்பா, சதீஸ் சித்தி சிந்து அக்கா, தங்கை சினேஜா, செல்வம் சித்தப்பா, சாந்தி சித்தி, அண்ணன்மார் சுஜீவன், சஜீபன் கனடாவிலுள்ள மோகன் மாமா, மாமி குமார் சித்தப்பா, தாவடி அப்பப்பா, அப்பம்மா, இணுவில் அம்மப்பா, அம்மம்மா, தைனி சித்தி மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் சிவகாமி அம்மன் அருள்பெற்று, சகல செல்வங்களும் பெற்று நீடு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

பிருந்தாவனம்,
இணுவில் கிழக்கு.

[7939]

---

சுதுமலை
சிந்மய பாரதி வித்தியாலயம்

## பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: 23 — 10 — 1994 ஞாயிற்றுக்கிழமை
இடம்: பாடசாலை மண்டபம்
நேரம்: பிற்பகல் 3 மணி

பிரேரணைகள் இருப்பின் 10 — 10 — 1994 ற்கு முன் தலைவர் அல்லது உப செயலாளரிடம் சமர்ப்பிக்கவும்.

திருமதி ஜெ கிருஷ்ணசாமி,
தலைவர்,
சண்டிலிப்பாய்.

சு. சுவேந்திரகுமார்,
உப செயலாளர்,
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[7663]

---

G S Q புள்ளிவிபரவியல்

## பாடக்குறிப்புகள் தேவை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் G.S.Q. புள்ளிவிபரவியல் பாடநெறியை வெளிவாரியாக கற்கும் வெளிநாட்டிலுள்ள மாணவர் ஒருவருக்கு தூய கணிதம், பிரயோககணிதம், புள்ளிவிபரவியல் பாடக் குறிப்புகள் (1ஆம் வருடம்) தேவை. தகுந்த விலை தரப்படும். உடன் தொடர்பு கொள்க.

இல. 701, மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(33127)

---

## 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: 30 — 05 — 1921



விண்ணில்: 02 — 10 — 1986

## திருமதி மரியரத்தினம் குணரத்தினம்

அணையாத தீபமே!
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.


அன்பு;
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புகையிரத ஒழுங்கை,
சாவகச்சேரி.

[33113]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



## அமரர் சண்முகம் வேலாயுதபிள்ளை

(வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவர்)

உதிப்பு: 17 — 04 — 1914

மறைவு: 12 — 10 1993

உழைப்பால் உயர்ந்த உத்தமராம் எம் தந்தை
ஊரார் போற்ற வாழ்ந்தவரும் எம் தந்தை
அடுத்தவரை எதிர் பாரார் இறக்கும்வரை
மெழுகு போல் உடல் உருகி ஒளி கொடுத்த-
எம் தந்தை

இறைவனடி சென்றாலும் எம்மிதயம்
மறக்காது, மறக்காது நாம் மண்ணில் உள்ளவரை"

அன்புத் தெய்வமே! நீங்கள் அன்பும் பாசமும் காட்டி எம்மையெல்லாம் வளர்த்து ஆறிவூட்டி, ஆளாக்கி ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத்துயில் கொண்ட போதிலும் உங்களை நாங்கள் என்றென்றும் மறவோம். அன்புடன் வளர்த்தெடுத்த நீங்கள் ஆண்டுகள் சாத்தனை ஆனாலும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருப்பீர்கள்

அன்புத் தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மனை வேண்டுகிறோம்.

உங்கள் அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

கொட்டடி,
யாழ்ப்பாணம்.

[33140]

---

## அயர்லாந்து

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி) சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

கல்வி, வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, வாக்குரிமை ஆகிய துறைகளில் கத்தோலிக்கர்களுக்கு பாகுபாடுகள் காட்டப்பட்டன.

இந்த பாகுபாடுகளை ஆட்சேபித்து கத்தோலிக்கர்கள் முதலில் சாத்வீக முறையிலேயே தமது போராட்டத்தை ஆரம்பித்தனர்.

புரட்டஸ்தாந்து தீவிரவாதிகள், கத்தோலிக்கர்கள் மீது தாக்குதலை நடத்த ஆரம்பிக்கவே இரு தரப்பினர் மத்தியிலும் மோதல்கள் இடம்பெற ஆரம்பித்தன.

சிறுபான்மையினரான கத்தோலிக்கர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்கத்துடன் பிரிட்டன் 1969 ஆம் ஆண்டு வட அயர்லாந்துக்கு தனது படைகளை அனுப்பி வைத்தது.

ஆனால் ஐ. ஆர். ஏ. படிப்படியாக தனது ஆதிக்கத்தை பலப்படுத்திக் கொண்டது. புரட்டஸ்தாந்துகள் மீது மட்டும் அல்ல பிரிட்டிஷ் படையினர் மீதும் தாக்குதல்களை அது முடுக்கி விட்டது.

### பிரிட்டனின் நேரடி ஆட்சியில்

1970 ஆம் ஆண்டு ஐ. ஆர். ஏயின் குண்டுத் தாக்குதல்கள் அதிகரித்தன.

1972 ஆம் ஆண்டு வட அயர்லாந்து பிரிட்டனின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. இன்று வரை பிரிட்டனின் நேரடி ஆட்சியின் கீழேயே வட அயர்லாந்து இருந்து வருகிறது.

### ஐ. ஆர். ஏயின் வரலாறு

ஐ ஆர். ஏ. இயக்கம் இன்று, நேற்று ஆரம்பிக்கப்பட்டது அல்ல.

1919 ஆம் ஆண்டு அது அமைக்கப்பட்டது.

1913 ஆம் ஆண்டு ஐரிஷ் தொண்டர் இயக்கம் என்ற பெயரில் ஓர் இயக்கம் இருந்தது. அந்த இயக்கமே பின்னர் ஐ. ஆர். ஏ. என்று பெயர் மாற்றப்பட்டது.

அயர்லாந்தில் பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராக ஐ. ஆர். ஏ அப்போது போராடி வந்தது.

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக 1919 — 21 இல் அயர்லாந்தில் சுதந்திரப் போராட்டம் நடந்தது. அப்போது ஐ. ஆர். ஏ. பிரிட்டனுக்கு எதிராக கெரில்லாத் தாக்குதல்களை நடத்தியது.

1920 ஆம் ஆண்டு அயர்லாந்து துண்டாடப்பட்டு வட அயர்லாந்து பிரிட்டனுடன் சேர்க்கப்பட்டது. 1921 ஆம் ஆண்டு தென் அயர்லாந்துக்கு பிரிட்டன் டொமினியன் அந்தஸ்து (Dominion Status) வழங்கியது. முழு அளவிலான சுதந்திரம் வழங்கப்படவில்லை.

### ஐ ஆர் ஏ. பிளவுண்டது

ஐ ஆர். ஏ யின் ஒரு பிரிவினர் முழு அளவிலான சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று கோரினர் இன்னொரு பிரிவினர் டொமினியன் அந்தஸ்தை ஏற்றனர். இதனால் ஐ. ஆர். ஏ. இரண்டாகப் பிளவுபட்டது

டொமினியன் அந்தஸ்தை ஆதரித்த பிரிவினர் அயர்லாந்தில் புதிய படைப் பிரிவில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். மற்றப் பிரிவினர் எதிர்த்து நின்றனர்.

1922 - 23 ஆம் ஆண்டுகளில் ஐ. ஆர். ஏயின் இரு போட்டிப் பிரிவினரும் மோதல்களில் ஈடுபடவே அது உள்நாட்டு யுத்தமாக வெடித்தது.

இந்த யுத்தத்தின் இறுதியில் டொமினியன் அந்தஸ்தை எதிர்த்த பிரிவினர் தோல்வி அடைந்தனர்.

இவர்கள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கைவிடவில்லை. 1948 ஆம் ஆண்டு தென் அயர்லாந்து (தற்போதைய ஐரிஷ் குடியரசு) காமன் வெல்த்தில் இருந்து விலகி முழு அளவில் சுதந்திரம் பெறும் வரை இவர்களின் போராட்டம் தென் அயர்லாந்துக்குள் நீடித்தது.

1948 ஆம் ஆண்டுக்குப் பின்பே இவர்களின் போராட்டம் வட அயர்லாந்து பக்கம் திரும்பியது.

### பேரழிவுகளை ஏற்படுத்திய குண்டு தாக்குதல்கள்

கடந்த காலங்களில் கத்தோலிக்கர்களின் ஐரிஷ் குடியரசு ராணுவமும் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் உல்ஸ்ரர் பாதுகாப்பு ஸ்தாபனமும் ஏட்டிக்குப் போட்டியாக பல தாக்குதல்களை நடத்தி இருந்தன.

★ 1974 மே மாதம் புரட்டஸ்தாந்து தீவிரவாதிகள் மூன்று கார்க் குண்டுத் தாக்குதல்களை ஐரிஷ் குடியரசின் தலைநகரான டப்ளினில் (Dublin) நடத்தினர். 33 சிவிலியன்கள் கொல்லப்பட்டனர் 120 பேர் காயம் அடைந்தனர்.

★ 1974 டிசம்பரில் பிரிட்டனின் போர்மிங்காம் நகரில் ஐ. ஆர். ஏ. நடத்திய குண்டுத் தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். 182 பேர் காயம் அடைந்தனர். பிரிட்டனின் சமாதான காலத்தில் இடம்பெற்ற மோசமான சம்பவமாக இது கருதப்பட்டது.

★ 1979 ஓகஸ்ட் 27 ஆம் திகதி மகாராணியாரின் மைத்துனர் ஏவுண்ட் பேட்டன் பிரபு (Earl Mount Batten) வட மேற்கு அயர்லாந்தில் டொனேகல் குடாவில் படகு ஒன்றில் சென்று கொண்டிருக்கையில் ஐ ஆர். ஏ. யின் குண்டுத்தாக்குதலுக்கு பலியானார்.

★ 1984 அக்டோபரில் பிரிட்டனில் உள்ள பிரைட்டன் கிரண்ட் ஹோட்டலில ஐ. ஆர். ஏ. நடத்திய குண்டுத் தாக்குதலில் கன்சர் வேட்டில் மாநாட்டுக்கு வந்திருந்த கன்சர் வேட்டில் எம். பயான சேர் அன்ரொனி பெரி உட்பட ஐவர் கொல்லப்பட்டனர். அப்போதைய பிரிட்டிஷ் பிரதமர் மார்கிறெட் தாட்சர் மயிரிழையில் உயிர் தப்பினார்.

★ 1993 அக்டோபரில் பெல்பாஸ்ட்டில் ஐ ஆர். ஏ. தீவிரவாதிகள் நடத்திய குண்டுத் தாக்குதலில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

### நிரந்தரத் தீர்வு கேள்விக்குறி

வட அயர்லாந்தில் பிரிட்டனின் ஆதிக்கத்தை ஒழிக்க ஐ. ஆர். ஏ. ஆரம்பித்த போராட்டம் தற்போது யுத்த நிறுத்தத்தில் வந்து நிற்கின்ற போதிலும் நிரந்தர தீர்வு இன்னும் கேள்விக்குறியாகவே இருந்துவருகிறது.

வட அயர்லாந்துக்கு உரிமை கோரும் அரசமைப்பை ஐரிஷ் குடியரசு (தென் அயர்லாந்து) இன்னும் கொண்டுள்ளது.

இதனைக் கைவிட ஐரிஷ் குடியரசு மறுத்து வந்ததும் கடந்த காலங்களில் சமாதான முயற்சிகளுக்குத் தடையாக இருந்தன.

ஆனால் பிரிட்டனுக்கும் புரட்டஸ்தாந்து தீவிரவாதிகளுக்கும் ஒரு சலுகையாக இதனைக் கைவிட ஐரிஷ் குடியரசு முன்வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே போன்று வட அயர்லாந்து மக்கள் வாக்களிக்கும் பட்சத்தில் வட அயர்லாந்து மீதான தனது ஆதிக்கத்தைக் கைவிடத் தயார் என்று பிரிட்டன் அறிவித்துள்ளது.

வட அயர்லாந்தின் தற்போதைய பிறப்பு வீதம் சனத்தொகையில் இன்னும் சில காலங்களில் தம்மைப் பின்தள்ளிடும் என்று புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் மத்தியில் அச்சம் நிலவி வருகிறது. கத்தோலிக்கர்களின் சனத்தொகைப் பெருக்கம் அந்த அளவுக்கு அதிகரித்து வருகிறது.

ஆகவே உடனடித் தீர்வோ அல்லது பல ஆண்டுகள் கழித்து வரக்கூடிய தீர்வோ எந்த ஒரு தீர்வு வந்தாலும் கத்தோலிக்கர்களுக்கே அது சாதகமாக அமையும் என்று நம்பப்படுகிறது

புரட்டஸ்தாந்துக்கள் எந்த ஒரு தீர்வையும் ஏற்காத வரை வட அயர்லாந்தில் அமைதி ஏற்பட்டு விட மாட்டாது. ★

---

# வைத்தியம் (தோய்வு - மூட்டு)

முன்னர் பதிவு செய்தவர்களுக்கு தபால் மூலம் பார்வையிடப்படும் திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. கிடைக்காதவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

மேலும் புதிய நோயாளர்கள்

பார்வையிடப்படவுள்ளதால் பதிவு செய்து உடன் திகதியைப் பெற்றுக் கொள்ளவும்.

ஞாயிறு
தவிர்ந்த ஏனைய நாட்களில்
காலை 9 மணி முதல் 12 மணி வரை
மாலை 4 மணி முதல் 6 மணி வரை

காரியதரிசி
மே/பா டாக்டர் சுராஜ் சோமசுந்தரம்
(ஆஸ்மா சிகிச்சை நிபுணர்)
33, 4ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

---

# G. C. C.

## வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம்

514/14, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(பழைய O. P. Dக்கு முன்பாக)

கண், காது, மூக்கு, தொண்டை (ENT), முறிவு, மகப்பேறு, சத்திர சிகிச்சை, சிறுபிள்ளைகளுக்குரிய வைத்தியம், சருமநோய்கள் என்பவற்றிற்கு விசேட வைத்திய நிபுணர்களினால் ஆலோசனை வழங்கப்பட்டு வருகின்றது. இத்துடன் மருந்தூல ஆய்வுகூட சேவைகளும் (B. C. G.) இங்கு நடைபெறுகின்றன

- நிர்வாகி

[33158]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/3 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## மாறும் கல்வித் திட்டம்

''பரீட்சையை மட்டும் நோக்காகக் கொண்ட கல்வியைப் போதிக்காது, வாழ்க்கைக்கு உகந்த கல்வியை மாணவர்களுக்கு வழங்க வேண்டும்.''

— புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் யாழ். வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி இவ்வாறு கூறியிருக்கிறார்.

வாழ்க்கைக்கு உதவாத கல்வி வெறும் ஏட்டுச் சுரைக்காய்தான் —

கல்விப் பணிப்பாளர் வலியுறுத்திய வகையில் கல்வித் திட்டத்தை சீரமைக்கவேண்டியது அவசியமானதும் அவசரமானதுமான பணியாகும்.

இதேசமயம் —

தற்போது நடைமுறையில் உள்ள கல்வித் திட்டத்தில் ஜி. சீ. ஈ. [சாதாரண தர] வகுப்புக்கு கீழ் உள்ள வகுப்புகளுக்கான பாடத்திட்டங்களை மாற்றியமைக்கவும் —

மக்களின் வாழ்க்கை நிலையோடு ஒட்டியதான — தொழில்நுட்ப அடிப்படையிலான — பாடங்களைப் புகுத்தும் வகையில் கல்வித் திட்டத்தை அடுத்த ஆண்டிலிருந்து அறிமுகப்படுத்தவும் —

அதற்கு ஏற்றவாறு பாடநூல்களை மீள எழுதவும் கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ். வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் வலியுறுத்திய வகையில் — வாழ்க்கை முறைக்கு உதவக்கூடிய கல்வித் திட்டத்தை — புதிய அமைச்சரின் கீழ் கல்வி அமைச்சு தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

சீரமைக்கப்படும் கல்வித் திட்டம் எமது மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ற வகையில் — நீண்டகால செயற்பாடு மற்றும் பயன்பாடு கொண்டதாக இருக்க வேண்டும்.

அரசாங்கங்கள் மாறும் போதும், கல்வி அமைச்சர்கள் மாறும்போதும், கல்வி அமைச்சின் உயரதிகாரிகள் மாறும் போதும் நமது கல்வித் திட்டங்கள் வேறுவேறாக மாற்றப்பட்டு வந்ததைத்தான் நாம் கண்டிருக்கிறோம்.

அடிக்கடி கல்வி முறை குறித்த வெள்ளை அறிக்கைகள் வெளியாவதும் —

முன்னைய கல்வித் திட்டங்களைக் குறைகூறும் அந்த அறிக்கைகள் புத்தம் புதிய திட்டங்களை சிபாரிசு செய்வதும் —

உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் அத்திட்டங்கள் காலகதியில் காலாவதியாகி ஒதுக்கித் தள்ளப்பட மீண்டும் புதிய திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டு வரப்படுவதும் தான் நமக்குக் கிடைத்த அனுபவம்.

அரசுகள், கல்வித்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் மாறும் போது கல்வித்துறையின் போக்கும் மாற வேண்டும் என்ற நிலைமையை மாற்றி —

சமூகம் மாறும் போது — வளரும் போது — அதன் தேவைகள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றுக்கு ஏற்ற வகையில் கல்வித்துறை மாற வேண்டும் என்ற நிலைமையை இத்துறை சார்ந்தோர் ஏற்படுத்த வேண்டும்.

நமது பகுதிகளில் ஆரம்பப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களில் 98 சதவீத மானோர் பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் வாய்ப்பை பெறுவதில்லை. ஆனால் இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாமல் நமது மாணவ சமூகத்தின் பெரும்பகுதியினர் பல்கலைக்கழகத்துக்குப்புகுதல் என்ற ஒரே இலக்கை வைத்தே வழிநடத்தப்படுகிறார்கள்.

அதனால் அந்த இலக்கை எட்ட முடியாத மாணவ சமூகத்தின் மிகப் பெரும்பகுதியினர் வேறு மார்க்கமில்லாது தாம் நட்டாற்றில் விடப்படும் நிலை உருவாகுகிறது.

இந்த அவலநிலையை ...

யாழ். மாவட்ட கனிஷ்ட செயலாளர் போட்டியை ஒட்டி நாம் விடுத்த செய்தியில் இலங்கையின் ஒலிம்பிக் வீரரான கலாநிதி என். எதிர் வீரசிங்கம் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

கல்வித்திட்டத்தை மீண்டும் சீரமைக்க முற்படும் அதிகாரிகள் இதனைக் கருத்தில் கொள்வது நன்று.

# "தேர்தலில் வாக்கையும் அரசுக்கு நிதியையும் தரும் சமாதானப் பேச்சு என்ற கவர்ச்சிச் சித்திரம்!

சந்திரிகா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்து ஆறு வாரங்களே ஆகின்றன. இந்தக் குறுகிய காலத்தில், ஐம்பது மாதங்களுக்கு மேலாகத் தேக்க நிலையில் இருந்து, முழு நாட்டையும் கொதிக்க வைத்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினை விவகாரத்தில் சந்திரிகா துணிச்சலுடன் கை வைத்திருக்கிறார் —

இனப்பிரச்சினையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட தமிழ் மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு (ஆரம்பப் பேச்சுக்கு) திகதியும் நிர்ணயித்து விட்டார். இலங்கை அரசியலில் இது ஒரு பெரும் முன்னேற்றம் (Break Through) —

இவ்வாறு இலங்கைக்கு வெளியே உள்ள எவரும் நினைக்கக் கூடியவாறு சந்திரிகா ஒரு தோற்றத்தை உருவாக்கியிருக்கிறார். மரைப் பார்த்தே அதிலிருந்து கிலையும் கனியைச் சுவைத்தது போன்ற உணர்வை தென்னிலங்கையில் மட்டுமன்றி வெளிஉலகத்திலும் ஏற்படுத்திவிட்டார்!

சமாதானப் பேச்சுவார்த்தை நடக்கிறதோ இல்லையோ அதில் முன்னேற்றம் காணப்படுகிறதோ இல்லையோ உரிய பயன் கிடைத்து நியாயமான தீர்வு ஒன்று விளைகிறதோ இல்லையோ, இனப்பிரச்சினை விவகாரத்தை சந்திரிகா தன் வழியில் முன்னெடுத்துள்ளார் என்றொரு கவர்ச்சியான ஓவியத்தை அவர் ஆறு வாரங்களில் வரைந்து விட்டார்.

இந்தக் குறுகிய காலத்தில் இனப்பிரச்சினை விவகாரத்தில் இத்தகைய முன்னேற்றகரமான பின்புலம் ஒன்று உருவாகும் என்று உள்நாட்டவர்களும் சரி வெளிநாட்டவரும் சரி எதிர்பார்த்திருக்க மாட்டார்கள் என்பது உண்மையே.

ஆட்சிக்கு வந்த ஆறுவாரங்களில் அவர் உருவாக்கிய இந்தப் பின்புலம் அவருக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பல சாதகமான பெறுபேறுகளைக் கொண்டு வரும். அவற்றை மனதில் வைத்தே புலிகளுடன் பேசுவது என்ற திட்டத்தையே பிரதமர் வகுத்திருப்பார் எனவும் கூறலாம்.

இனப்பிரச்சினை விவகாரத்தை சாதுரியமாகவும் சாணக்கியத்துடனும் கையாளுகிறார் என்ற சந்திரிகா உருவாக்கியுள்ள அபிப்பிராயத்தினால் அடுத்த மாதம் நடக்க இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் அதிக வாக்குகளை வாங்கும் நற்பயன் அவருக்கு நிறைய உண்டு.

### கணக்குப் போட்டு பேச்சு வார்த்தை

இங்கே அவர் மிகவும் புத்திசாலித் தனமாக நடந்து கொள்கிறார் என்று கூடச் சொல்லலாம். ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் வரை பேச்சுவார்த்தையின் சரியான கட்டத்தைத் தொடக்காமல் ஆரம்பப் பேச்சுடனேயே அதுவரை காலம் கடந்து போகக் கூடியதாக கணக்குப் போட்டுச் செயற்பட்டிருக்கிறார்.

பிரச்சினையின் உள்ளுடனைத் தொடும் — உணர்வைத் தூண்டக் கூடிய — கட்டத்தை ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தவிர்த்துக் கொண்டுள்ளார். அதில் எனைத் தாம் பேச்சுவார்த்தை சாதகமா, பாதகமா? வெற்றியடையுமா தோல்வி அடையுமா? என்பவற்றை வாக்காளர்கள் புரிந்து கொண்டு விடுவார்கள் எனவே அதனைத் தவிர்த்துக் கொண்டு ஆரம்பக் கட்டப் பேச்சுடன் நின்றால் ஜனாதிபதி தேர்தலில் தமது வாக்கு வங்கியைப் பலப்படுத்திக் கொள்ளலாம் என்று சந்திரிகா சரியாகக் கணக்குப் போட்டுச் செயற்படுகிறார்!

வெளிஉலகத்தைப் பொறுத்தவரையில் சந்திரிகா உருவாக்கியுள்ள புதிய தோற்றம், கவர்ச்சி காவியம் அவருக்கு நற்பெயரையும், மதிப்பையும் மட்டுமன்றி நிறைந்தளவு பணத்தையும் தேடிக்கொடுக்கவுள்ளது.

### புதிய பதிவை ஏற்படுத்தும்

இலங்கை இனப்பிரச்சினைக்கு நீதியான, நியாயமான தீர்வு ஒன்று காணப்படும் என்ற செய்தியை உலக நாடுகள் சபையான ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் தமிழரான வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமரைக் கொண்டே தூது அனுப்பியிருக்கிறார்.

என்ன தடைகள் வந்தாலும், அவற்றைத் தாண்டி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதில் பிரதமர் சந்திரிகா உறுதியாக உள்ளார் என்று அமைச்சர் கதிர்காமர் ஐ.நாவில் உரத்த குரலில் முழங்கியிருக்கிறார்.

இந்த முழக்கம், இனப்பிரச்சினை விவகாரத்தில் உலகளாவிய ரீதியில் ஒரு புதிய பதிவை (Impression) ஏற்படுத்தும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

மேலும், தமிழீழக் கோரிக்கையை நிறைவேற்ற முடியாது என்றும் நியாயமான தீர்வை உருவாக்குவதே சாத்தியமானது என்றும் கதிர்காமர் நியூயோர்க்கில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்திருக்கிறார். தமிழீழக் கோரிக்கையை எதிர்க்கிறோம்; நாங்கள் தமிழர்களுக்குரிய உரிமைகளை வழங்கப் போகிறோம் என்று கூறப்படும் செய்தியாகவும் இதனைப் பார்க்கலாம். அதாவது இனப்பிரச்சினை விவகாரத்தில் உலக நாடுகளைத் தனது பக்கத்துக்குக் கொண்டு வருவதற்கான மறைமுகமான முயற்சி இது!

ஆட்சி மாற்றம் ஒன்றை விரும்பிய சிங்கள மக்கள் அதனை ஒகஸ்ட் தேர்தலில்

அரசியல்

செயற்படுத்தினார்கள். அந்த மாற்றத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில், தமிழர் விவகாரத்தில் புதிய அரசு, புதிய அணுகுமுறையைக் கையாளுகிறது. முந்திய அரசை விட வித்தியாசமான கொள்கையைக் கொண்டுள்ளது என்ற ஒரு தோற்றத்தை சந்திரிகா வெளி உலகுக்குக் காட்டி இருக்கிறார். அதனால் அவருக்கு பெருமளவு வெளிநாட்டு நிதி

## நியுயோர்க்கில் நிரந்தரத் தீர்வு முழக்கம்! இங்கே இராணுவத்தை வளர்க்க முரசம்!!

வந்து குவியும் வாய்ப்பு உண்டாகியுள்ளது. அரசின் முக்கிய இலக்குகளில் நிதி உதவி பெறுவதும் ஒன்றாகும்.

முந்திய அரசாங்கத்தின் நிதி மோசடிகள், ஊழல்கள் காரணமாக திறைசேரி வற்றிப் போயுள்ளது. அதனை நிரப்பினால்தான் சந்திரிகா அரசு உத்தேசித்துள்ள மக்கள் நலத் திட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியும்.

### நிதி உதவி குவியும் சாத்தியம்

அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்டத்தில் 3,000 கோடி ரூபா துண்டு விழும் என்று மேலெழுந்தவாரியாக அமைச்சர் ஒருவர் மதிப்பிட்டிருக்கிறார் ஆனால் சரியான கணக்கு 4,000 கோடியாகவே இருக்கும் என்று அதிகாரிகள் கருதுகிறார்கள். இத்தகைய நிலையில், வெளிநாடுகள் மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவி சந்திரிகாவுக்கு அவசியமாகத் தேவை என்பதனை சொல்லித் தெரியவேண்டியதில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்று தனது அரசியல் நிலையை வலுப்படுத்திக் கொண்டால், பலமடையச் செய்தால் மட்டும் போதாது. மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி அவர்களின் ஆதரவைப் பெற்றால் மட்டுமே அரசியல் ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என்பதைச் சந்திரிகா உணர்ந்துள்ளார். மக்கள் நலத்திட்டங்களை அமுல் செய்வதற்குத் தேவையான பணத்தை வெளியிலிருந்தே பெற்றாகவேண்டும்.

அவருக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு, இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான பேச்சுவார்த்தை: நியாயமான தீர்வு என்ற வெளித்தோற்றம் மிகப் பெருமளவில் உதவப்போகிறது.

உலக வங்கியின் வருடாந்த மாநாடு இம்மாதம் நான்காம் திகதி — நாளை மறுதினம் — ஸ்பெயினின் தலைநகரம் மாட்ரிட்டில் ஆரம்பமாகிறது. அந்த மாநாட்டில் சந்திரிகாவே கலந்து கொள்ள ஏற்பாடாகி இருந்தது, ஆனால் ஜனாதிபதி தேர்தல் காரணமாகச் செல்ல முடியவில்லை.

எனினும் இலங்கைக்கு பெருமளவு நிதி உதவி வழங்க முடிவு செய்யப்படும் என்று வங்கியின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி கோடி காட்டியிருக்கிறார். முந்திய அரசின் காலத்தில் ஒன்றரை வருடமாக உலக வங்கி எந்தவித உதவியையும் இலங்கைக்கு வழங்கவில்லை என்பது இங்கே குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதுபோலவே சர்வதேச நாணய நிதியமும் இலங்கைக்கு வழங்கும் கட்டமைப்பு வசதி நிதி உதவியை அதிகரிக்க உள்ளதாக நிதித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### வாரி வழங்கும் வாய்ப்பு

சர்வதேச நிதி நிறுவனங்களில் முன்னோடிகளாக விளங்கும் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் சந்திரிகா அரசுக்குத் தாராளமாக உதவ முன்வந்தால், அவற்றைப் பின்பற்றி ஏனைய நிதி நிறுவனங்களும், தொண்டர் நிறுவனங்களும், நாடுகளும் புதிய பிரதமருக்கு வாரி வாரி வழங்கும் என்று நிச்சயமாக நம்பலாம்.

ஒரு காலத்தில் கட்டுப்பாட்டுப் பொருளாதாரத்தை இறுகப் பிடித்துக் கொண்டிருந்த ஸ்ரீ. ல. சு. கட்சியையும், இடதுசாரிக் கட்சிகளையும் திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்கச் செய்த கெட்டித்தனமும் சந்திரிகாவிடம் இருந்தது. அந்தத் திறந்த பொருளாதாரக் கொள்கை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றை சந்திரிகாவுக்கு மிக நெருக்கமாகக் கொண்டு வந்துள்ளதையும் இங்கே குறிப்பிட்டுக் கூறலாம்.

முந்திய ஐ.தே.க. அரசாங்கம், இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் பாரிஸில் நடைபெறும் போதெல்லாம் யுத்த நிறுத்தம் பற்றியும், புலிகளுடன் பேசுவது பற்றியும் பிரஸ்தாபித்து நிதி உதவி பெற்று வந்தது. அந்தத் தந்திரத்தை எவ்வளவோ படி உயர்ந்து 'வென்று' விட்டது. வென்று விட்டது, சந்திரிகா வரைந்துள்ள கவர்ச்சிச் சித்திரம்!

இத்தனைக்கும் —

பேச்சுவார்த்தைக்கு உகந்த சூழ்நிலையைத் தோற்றுவிக்கக் கூடிய யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வருவதற்குப் பலம் இல்லாதவராகவே சந்திரிகா காணப்படுகிறார்.

யுத்த நிறுத்தம் இல்லாமலே பேச்சுவார்த்தை நடத்தலாம் என்ற கருத்தை படை உயர் அதிகாரிகள் வலியுறுத்தி வருகிறார்கள். அவர்களின் அக் கருத்துக்கு முரண்பட்டுச் செயற்படும் திராணியை சந்திரிகாவிடம் காண முடியவில்லை.

### படையினரைச் சீண்ட விரும்பவில்லை

பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி விஜேதுங்காவின் பணிப்புக்குள் வருபவர்களே. எனினும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் படையினருக்கு உத்தரவுகளை விடுக்கிறார்.

உதயகாந்தன்

ஆனால் படை உயர் அதிகாரிகளுடன் முரண்பட்டுக் கொள்வதை அவர் தவிர்த்து வருகிறார். அவற்றில் ஒன்றே யுத்த நிறுத்தம் கொண்டு வராமலே பேச்சுவார்த்தை நடத்துவது என்ற நிலைப்பாடு. அதாவது ஜனாதிபதித் தேர்தல் வரை படையினரைச் சீண்டுவதற்கு சந்திரிகா விரும்பவில்லை.

ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றியீட்டினால், இப்போது பொ. ஐ. முவை ஆதரிக்கும் கட்சிகள் மறுவளமாகத் திரும்பி ஐ. தே. கட்சியை ஆதரிக்கும் என்றும் —

ஐ.தே.க. அரசாங்கம் மீண்டும் பதவிக்கு வரும் என்றும் காமினி திஸநாயக்கா தெரிவித்திருக்கிறார்.

காமினியின் இந்தக் கூற்று அரசியலில் பல அர்த்தங்களை உடையது. ஜனாதிபதித் தேர்தலின் போது அரசியல் தில்லுமுல்லு ஒன்றை நடத்துவதற்கு அத்திவாரம் போடுகிறார் என்பது அவற்றில் ஒன்று எனக் கொள்ளலாம்.

படை உயர் அதிகாரிகளைக் கைக்குள் போட்டுக் கொண்டு ஓர் ஆட்சிக் கவிழ்ப்புச் சதியில் ஈடுபடுவதும் காமினியின் திட்டங்களில் ஒன்றாக இருக்கலாம். அத்தகைய அரசியல் குள்ளத்தனங்கள் காமினியிடம் நிறையவே உண்டு.

எனவே சந்திரிகா படையினருடன் இப்போது முரண்படுவது விவேகமற்ற செயல் என்பதனை எவரும் ஏற்றுக் கொள்வர். எனினும் ''விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது'' என்ற மந்திரத்தைக் கொண்டு பல இலக்குகளை அடைய வேண்டி உள்ளது! அடைகிறார் அதனால் அவர் அந்தக் கவர்ச்சி மந்திரத்தை, ஓதிக் கொண்டிருக்கிறார்! உலகமெலாம் காற்றில் பரவவிட்டிருக்கிறார்!

### இராணுவத்தின் குழப்பம்

இனப்பிரச்சினை விவகாரத்தில் ஜனாதிபதித் தேர்தல் வரையும் தான் சந்திரிகா இவ்வாறு மெதுவாக ''நடத்து'' செல்வார் என்று நினைக்கும் போது —

மிகவும் சிக்கலான, கஷ்டமான காரியமாக விளங்கும் இனப்பிரச்சினை விவகாரத்தை வேகமாகத் தீர்ப்பது கஷ்டம்; ஒரு வருட காலத்திற்குள் தீர்வு காண்பது என்பது கூட இலகுவானதல்ல என்று நினைக்கும்போது —

இராணுவத்துக்கு ஆள் திரட்டுவதும், பயிற்சி அளிப்பதும் தொடரும் என்ற இராணுவத் தரப்பு அறிவிப்பு பெரும் குழப்பத்தை உண்டாக்குகிறது!

பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படும் என்று கதிர்காமர் நியூயோர்க்கில் முழங்கும் அதேவேளை, இங்கே இராணுவம் பலப்படுத்தப்படும் என்ற போர் முரசம் கேட்கிறது! இந்த இரண்டும் எந்தப் புள்ளியிலும் வந்து சந்திக்க முடியாதவை!!

பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, சமாதானம் வந்தால் இராணுவத்தினரை அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடுத்துவதே அரசின் நோக்கம் என்ற சிலருடைய பேச்சையும் இன்டைக்கு செய்தி அது புதிய முரசம்!

முரசத்தைத் தடுக்க முடியாவிடில், சந்திரிகா இப்போது ஓதும் மந்திரத்தின் ஒலி அடங்குவது நிச்சயம்! ★

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# உவர்த் தன்மையான நிலத்தில் பரீட்சார்த்த முறையில் நெற்செய்கை

கடல் ஏரியை அண்டிய பகுதிகளில் வயல் நிலங்கள் உவர் நிலங்களாக மாற்றப்பட்டதற்கு பல காரணங்கள் உள்ளன. சுமார் இருபது வருடங்களுக்கு முன் இப்பகுதியில் நெல் வேளாண்மை செய்யப்பட்டதாயினும் இப்பயிர்ச்செய்கை பின்வரும் காரணங்களினால் கைவிடப்பட்டுள்ளன.

★ கடல் நீர் உட்புகுந்து மண்ணை உவராக்கியிருக்கலாம்

★ கோடைகாலத்தில் காற்றினால் ஏற்படும் மண் அரிப்பினால் உப்புச் செறிந்த மண் நல்ல நிலங்களில் கொண்டு வந்து சேர்க்கப்பட்டதனாலும் இவ்வயல்கள் உவராகியிருக்கலாம்.

★ மேலும் மேட்டு நிலங்களில் தோட்டம், தோட்டமாகக் காணப்படும் உப்புக்கள் கரைந்து இப்பள்ளமான இடங்களை அடைந்திருக்கலாம்.

★ கோடை காலத்தில் மண்ணின் மேற்பரப்பிலிருந்து நீர் ஆவியாகும் போது கீழ் உள்ள உவர் நீர், மண்ணின் மேற்பரப்புக்கு மயிர்த்துளைத் துவாரங்கள் மூலம் வரும் போது அவ்வகையான மண் உவர்த்தன்மையினை அடைகின்றன.

★ கடந்த பல காலப்பகுதிகளாக தனிப்பட்ட மக்களாலும், அரசாங்கத்தினாலும் மீட்பு முறைகள் ஒன்றும் கையாளப்படாததனாலும் இந்நிலங்களில் உவர்த்தன்மை காலப்போக்கில் கூடியிருக்கலாம்.

மேற்கூறப்பட்ட விடயங்களை ஆராய்வதற்காகவும், இம் மண்ணில் உள்ள உப்புக்களின் செறிவுகள் காலத்துக்கு ஏற்ப, கோடை - மாரி

### அபிவிருத்தி

காலங்களில் எவ்விதம் மாறுகின்றன, அத்துடன் எங்கிருந்து இவ்விதமான உப்புக்கள் கரைந்து இவ்விடத்துக்கு வருகின்றன என்பதை ஆராய்வதற்காகவும் எமது விவசாய ஆராய்ச்சிப் பிரிவினால் கடந்த ஒரு வருடகாலமாக சகல திக்கிலும் காலம் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு அவற்றிலுள்ள உப்புக்களின் செறிவினை பகுப்பாய்வு செய்யப்பட்டன.

எங்களுடைய ஆய்வு கடல் ஏரியிலிருந்து சுமார் 325 மீற்றர் தூரத்தில் ஆய்வு செய்யப்பட்டது. தை மாதத்தில் உப்பின் செறிவு 0·15 - 4·00% ஆகக் காணப்பட்டது. பின்னர் பங்குனி மாதத்தில் உப்பின் செறிவு கூடிய பிர

| மண்ணில் உள்ள உப்புக்களின் செறிவு | |
|---|---|
| உவர்த்தன்மையின் அளவு | மொத்தமாக கரைந்துள்ள உப்புகளின் வீதம் |
| ★ உவர் குறைந்த மண் | 0 20% குறைவாக |
| ★ உவர்த்தன்மை கொண்ட மண் | 0 25% — 0 50 |
| ★ கூடுதலான உவர்த்தன்மை கொண்ட மண் | 10%க்கு கூட |

தேசத்தில் பரவியிருந்தது. அப்போது உப்பின் செறிவு 0·50 - 1 05% மாகக் குறைந்து காணப்பட்டாலும் உப்பின் செறிவின் பரம்பல் வைகாசி மாதத்தை விட கூடிய பிரதேசத்தில் காணப்பட்டது. அவ்வாறே ஆனி மாதத்திலும் உப்பின் செறிவு மாசி மாதத்தை விட கூடியிருந்தது. [illegible] கொண்டு சென்றது.

### இவற்றிலிருந்து வரும் தீர்வுகள்

★ கோப்பாய்ப்பிரதேசத்தில் யாழ் ஏரியை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள நெல் வயல்களில் தைமாதத்தில் உள்ள உப்பின் செறிவினை அடிப்படையாகக் கொண்டு நெற்செய்கைக்கு உட்படுத்தக் கூடிய வயல்களை இனங்காணலாம்.

★ இப்படியான பகுப்பாய்வு பரந்த அடிப்படையில் யாழ். ஏரிக்கரையில் மேற்கொண்டால் இப் பிரதேசத்தில் கணிசமான அளவு நிலம் நெற்செய்கைக்கு ஈடுபடுத்த முடியும்.

★ இவ்விதமாக இனங்காணப்பட்ட நிலங்களில் தகுந்த செய்முறைகள் மூலமும் உவர் தாங்கக் கூடிய நெல் இனங்களை உபயோகித்தல் மூலமும், இதனால் பெறக் கூடிய விளைவுகளை ஸ்திரப்படுத்தலாம்.

★ எவ்வாறாயினும் சாதாரண நெல் வயல்களில் கிடைக்கும் விளைவிலும் குறைந்த அளவில் விளைவினைத்தான் பெறக் கூடியதாக இருக்கும். ஆகையினால் அது குடும்ப அங்கத்தவர்களை உபயோகிக்கும் விவசாயிகளுக்கே, அதாவது நுண்விவசாயிகளுக்கே (Substantial famer) பெருமளவில் பொருந்தும். வியாபார நோக்கத்துடன் இம்முயற்சியை மேற்கொள்வது அசாத்தியமானது.

எவ்வாறாயினும் தற்போது யாழ். குடாநாட்டிலுள்ள நிலப்பயன்பாட்டை அதிகரிக்கும் போது இம்முயற்சியானது கோசியரீதியில் யாழ். குடாநாட்டிலுள்ள நிலப் பயன்பாட்டை அதிகரிக்கும்.

இது எமக்கு தேசிய ரீதியிலாம். குடாநாட்டிலுள்ள உற்பத்தித் திறன் குறைந்த இடங்களில் ஓரளவு பயனைப் பெறுவதற்கு உதவும். தை மாதத்தின் பிற்பகுதியில் உப்பின் செறிவு கணிசமான அளவு அதிகரிப்பதனால் நெற்செய்கையைத் தொடர்ந்து, ஏனைய பயிர்கள் செய்வதற்கு ஏற்ற சாத்தியக்கூறு குறைவு.

உப்பின் செறிவு 0 25%க்கு கூடிய இடங்களில் சாதாரண முறையில் நெற்செய்கைக்கு இந்நிலங்களை உட்படுத்தும் சாத்தியம் குறைவு. இந் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட வேண்டுமாயின் விஞ்ஞான தொழில் நுட்ப ரீதியில் அதற்கு அதிக செலவும் நீண்டகாலமும் எடுக்கும்.

யாழ். மாவட்டத்திலுள்ள நிலங்களின் பெரும்பானவை கூடுதலான படியினால் [மேற்குறிப்பிட்ட உவர்நிலத்தை மீட்டெடுப்பது சமூக பொருளாதாரத்துடன் தொடர்புள்ளது. 0.5%க்குக் கூடுதலான உவர்த் தன்மையுடைய நிலங்களை மழை நீரினைப் பயன்படுத்திப் படிப்படியாக மீட்டெடுக்கலாம். அத்துடன் உவர் தொடர்ந்து பரவுவதையும் ஓரளவு கட்டுப்படுத்தலாம்.

இ. ஈஸ்வரபட்சம்
விவசாய ஆராய்ச்சி அதிகாரி

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரவு—செலவுத் திட்டத்தின் கீழ்
# திட்டமிட்ட வேலைகளை பூர்த்தி செய்ய அறிவுறுத்து

யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட வேலைகளை விரைவில் பூர்த்தி செய்யுமாறு யாழ். திட்டமிடல் பகுதி கேட்டுள்ளது.

1993-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து மேற்கொள்ள திட்டமிட்ட வேலைகள் எதையும் நிறுத்த வேண்டாம் என்றும்—

அந்த வேலைகளை விரைவில் பூர்த்தி செய்து அது தொடர்பான ஆவணங்களை செயலகத்தில் சமர்ப்பிக்குமாறும்— கோரப்பட்டுள்ளது.

எக்காரணம் கொண்டும் மறு அறிவித்தல் வரை புதிதாக வேலைகளைப் ஆரம்பிக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.


## JEYA CAKE ICING CENTRE

கேக் ஐசிங், மாச்சிவி மலர்கள் [Sugar Craft] மேலைத்தேய ஐசிங் அலங்காரங்கள் [பொன்டன் ஐசிங்] சமையல்கலை (Cookery) கைப்பூவேலைப் பாடுகள் (எம்றோய்டரி) வகுப்புகள் ஆரம்பமாக உள்ளன.

வகுப்புகளில் சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

JEYA MAHAL,
No. 7. Katkulli Lane,
Chavakachcheri.

[7932]


# மரண அறிவித்தல்கள்

## வயித்திலிங்கம் சோமசுந்தரம்

வயித்திலிங்கம் சோமசுந்தரம் [முன்நாள் மா. ந. சபை சுகாதார மேற்பார்வையாளர்] இருபாலையில் 30-9-94 இல் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும்' சுந்தரராசா, பாக்கியராசா, மகேந்திரராணி, சிறிஸ்கந்தராசா மகேந்திரராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலாதேவி, நிர்மலாதேவி, இறேஸ் ஞானேஸ்வரி, ராஜேஸ்வரி, யோகராஜா முத்துக்குமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்,
சோ. மகேந்திரராஜா
(இ போ. ச.)
மகன்

[33155]

## திருமதி கருணைநாயகி குமரேசபிள்ளை
(வேலணை மேற்கு)

வேலணை மேற்கு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 652, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட கருணைநாயகி [ராசா] 1-10-94 இல் இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் குமரேசபிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராசா, விமலநாதன், இராஜபூமணம், புஸ்பகாந்தி ஆகியோரின் அன்புச்சகோதரியும், பாக்கியலெட்சுமி, பெரியநாயகி, பரமசாமி, தையல்நாயகி, ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்,
ச. நடராசா
(சகோதரன்)

652, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(33157)

## திருமதி வாலாம்பிகை நடராசா
(நயினாதீவு)

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி வாலாம்பிகை நடராசா 01-10-1994 இல் கொழும்பில் காலமானார்.

இவர் திரு. கதிரேசு நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரேசு செல்வமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், திரு. நல்லையா, திருமதி மனோன்மணி (ஓய்வுபெற்ற ஆசிரியை). திருமதி ருக்குமணி ஆகியோரின் அருமைச் சகோதரியும், திருமதி இராசமணி, திரு. பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்), திருமதி கனகம்மா, காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்). செல்லத்துரை ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (2-10-94) கொழும்பில் நடைபெறும்.

தகவல்,
ச. பரஞ்சோதி
(பெறாமகன்)

4 ஆலய வீதி ஒழுங்கை,
திரு நல்வேலி

(33160)

## சின்னையா முருகேசு

இளைப்பாறிய யாழ்ப்பாணப் புகையிரத நிலைய பிரதம அதிபர் சின்னையா முருகேசு அவர்கள் 16-9-94 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், சட்டத்தரணி சுந்தரலிங்கம் J. P U M, சரஸ்வதி ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ராஜதுரை F R C.P, கமலா (உதவிப் பரீட்சை ஆணையாளர்) ஆகியோரின் அருமை மாமனாரும், குலோத்துங்கன், திருமாறன், வரதன், பிருந்தா ஆகியோரின் அருமைப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22-09-94 அன்று டொன்கஸ்டர் U K யில் நடைபெற்றன.

உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்

தகவல்,
குடும்பத்தினர்

இல 40, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர்.

(33153)

# வல்லை மாவட்ட ஆஸ்பத்திரியில் முடிக்கிடக்கும் சத்திரசிகிச்சை பிரிவு
## நோயாளர் வேறு ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லும் அவலம்

வல்வெட்டித்துறை, ஒக். 2

வல்லை மாவட்ட வைத்தியசாலையில் முப்பத்தைந்து லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நிலவறைச் சத்திர சிகிச்சை நிலையம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகப் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

பல படுக்கை வசதிகளும், சத்திர சிகிச்சை அறை வசதிகளும் கொண்ட இந்த நிலவறைச் சத்திர சிகிச்சை நிலையத்துக்கு மின் உபகரணங்களும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையத்தை இயக்கக் கூடியதாக வைத்திய உபகரணங்கள், மற்றும் மின்சார வசதிக்குரிய ஜெனரேற்றர்கள் எதுவும் இல்லாததாலேயே அதனைப் பயன்படுத்த முடியாது உள்ளதாக ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இது குறித்து சுகாதாரப் பகுதிக்குப் பல தடவைகள் எடுத்துக்கூறியும் எவ்வித பயனும் இல்லை என்றும் அவை கவலை தெரிவித்தன.

1947 ஆம் ஆண்டு வல்லை மக்கள், இந்திராணி வைத்தியசாலை என்ற பெயரில் இந்த ஆஸ்பத்திரியை ஆரம்பித்தனர். காலப் போக்கில் அரசாங்கம் இதனைக் கையேற்றது.

அதன் பின்னரும் வல்லை மக்கள் ஆஸ்பத்திரிக்கு பல கட்டடங்களை கட்டி அன்பளிப்புச் செய்தனர்.

இவ்வைத்தியசாலை இவ்வருடம் மார்ச் மாதம் நான்காம் திகதி முதல் மாவட்ட வைத்தியசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டது.

எனினும் மாவட்ட ஆஸ்பத்திரிக்குரிய சேவைகளுக்கான வசதிகள் செய்யப்படவில்லை.

★ வைத்தியசாலைக்கு நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி (D. M. O) இல்லை.

★ பற்சிகிச்சை வைத்திய நிபுணர் நிரந்தர சேவையில் இல்லை.

★ இரத்தப் பரிசோதனை மற்றும் ஆய்வுகூட உத்தியோகத்தர் இல்லை.

★ எக்ஸ்றே கருவி இல்லை.

★ ஜெனரேட்டர் வசதி இல்லை.

★ வைத்திய உபகரணங்கள் பற்றாக்குறை.

★ பெண் தாதி உத்தியோகத்தர்களுக்கு பற்றாக்குறை.

★ பெண் நோயாளருக்குரிய மலசலகூடம் திருத்தப்படவில்லை.

★ இரத்த அழுத்தத்துக்குரிய மருந்து உட்பட பல மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு.

இவ்வாறு பல குறைபாடுகள் உள்ளதாக ஆஸ்பத்திரி அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் சுட்டிக்காட்டின.

மாவட்ட வைத்தியசாலை என்ற ஒன்று பெயருக்கு வல்லையில் இருக்கும்போது, இப்பகுதி நோயாளர்கள் பலமைல்கள் கடந்து வேறு ஆஸ்பத்திரிக்குச்செல்ல வேண்டிய அவலநிலை எப்போது நீங்கும் என்று இப்பகுதி மக்கள் கேட்கிறார்கள்.

வல்லைப் பகுதியில் அரச படையினர் அடிக்கடி நடத்தும் ஷெல் மற்றும் விமானத் தாக்குதலால் காயமுற்றவர்கள், தூரத்தே உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது வழியிலேயே இறந்துபோன சம்பவங்களும் உண்டு என்பதையும் மக்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

சுகாதாரப் பகுதியினருக்கு இவ்வைத்தியசாலையின் வசதியின்மைகளைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் உதிப்பது எப்போது என்றும் அவர்கள் கேட்கிறார்கள்.

(அ-ஓ-155)

## சமய போட்டிகள்

யாழ்ப்பாணம், ஒக். 2

வேலணை — வங்களாவடி முறைக் கல்விக் கோட்டத்தின் சமய செயற்பாடுகளில் ஒன்றாக பண்ணிசை, சகல கலாவல்லிமாலை புராணபடனப் போட்டிகள் நாளை நடத்தப்படவுள்ளன.

ஆனைப்பந்தியில் உள்ள உயர் கலைக் கல்லூரியில் இயங்கும் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்தில் நாளை காலை 8.30 மணிக்கு இந்தப் போட்டிகள் இடம் பெறும்.

(ஐ)

# தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் வருகை

வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற தொண்டர் நிறுவனங்களைச் சேர்ந்த 19 பேர் நேற்று யாழ். வந்து சேர்ந்தனர்.

திருமலையில் இருந்து 'பிளாப்பயான் கப்பல் மூலம் இவர்கள் பருத்தித்துறையை வந்தடைந்தனர்.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை வரை இவர்கள் இங்கு தங்கியிருப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4-173)

# பி. பி. ஸி தரத்துக்கு ரூபவாஹினி உயரும்
## புதிய தலைவர் கூறுகிறார்

கொழும்பு, ஒக். 2

பி. பி. ஸியின் தரத்துக்கு ரூபவாஹினியையும் உயர்த்துவது எனது குறிக்கோள் ஆகும் என்று ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு. வசந்தராஜா தெரிவித்துள்ளார்.

தமது இந்த முயற்சிக்கு பிரதமர் சந்திரிகாவின் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தமக்குக் கிடைக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பணியைச் செய்வதற்காகவே தாம் பி. பி. ஸியில் வகித்து வந்த பதவியை துறந்துவிட்டு நாடு திரும்பியதாக தெரிவித்த வசந்தராஜா —

முன்னைய அரசின் பிரசாரப் பீரங்கியாகச் செயற்பட்ட ரூபவாஹினியை முற்றிலும் மாற்றியமைக்கப் போவதாகவும்—

ஜனாதிபதித் தேர்தலின் பின் இந்த மாற்றங்கள் துரிதமாக்கப்படும் என்றும் தெரிவித்தார். (இ-ஐ-6)

## சென்னையில் நடந்த வைபவத்தில்
# சிறந்த எழுத்தாளர் விருது யோகநாதனுக்கு கிடைத்தது

சென்னை, ஒக். 2

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த திரு. செ. யோகநாதனுக்கு சிறந்த தமிழ் எழுத்தாளருக்கான விருது சென்னையில் வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆயர் பேரவையின் சாந்தோம் கலைத் தொடர்பு நிறுவனம் ஆண்டுதோறும் வழங்கும் சிறந்த தமிழ் எழுத்தாளருக்கான விருதும், பரிசும் இந்த ஆண்டு எழுத்தாளர் செ. யோகநாதனுக்கு வழங்கப்பட்டது.

சென்னை மியூசிக் அகடமி மண்டபத்தில் நடந்த பரிசளிப்பு விழாவில் சென்னை மயிலைப் பேராயர் அருட்திரு: அருள்தாஸ், யோகநாதனுக்கான விருதையும், பரிசையும் வழங்கினார், விழாவில் பிரபல இசையமைப்பாளரான எம். எஸ். விஸ்வநாதனுக்கும் சாந்தோம் விருது வழங்கப்பட்டது. (க)

# தென்மராட்சி, தீவக வலய தடகள விளையாட்டு விழா

சாவகச்சேரி, ஒக். 2

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி குழுவின் தென்மராட்சி தீவக வலய விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தடகள விளையாட்டு விழா இன்று ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. கலைவாணன் விழாவுக்கு தலைமை வகிப்பார்.

பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பூ சுந்தரம்பிள்ளையும்—

சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பொறுப்பாளர் திரு. வீமன், சாவகச்சேரி பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் தீவக கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. முகிலன், தென்மராட்சி கோட்ட பரசியல் துறை மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி கிருஸ்ணா, மட்டுவில் மகாவித்தியாலய அதிபர் திரு. பாலசுப்பிரமணியம், விளையாட்டு அபிவிருத்திக் குழு செயலர் திரு. ச. முருகேசன் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-31)

# கிராமிய சுகாதார உதவியாளர்கள்
## 29 பேர் நியமனம்

யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் 29 கிராமிய சுகாதார உதவியாளர்களுக்கு நேற்று முதலாம் திகதி முதல் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி பகுதியில் கடந்த ஒரு வருடகாலமாக 71 கிராமிய சுகாதார உதவியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு வந்தனர். இவர்களில் 52 பேர் கிராமிய சுகாதார உதவியாளர் பரீட்சையில் சித்தியடைந்தனர். இதில் 7 பேர் அதிவிசேஷ சித்தியடைந்திருந்தனர்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்த 52 பேரில் இருந்தே 29 பேருக்கு மாநகராட்சி மன்றத்தில் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவர்களை நியமிப்பதற்கான உதவியை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தினர் வழங்கியுள்ளனர்.

யாழ். மாவட்டத்தின் ஏனைய சுகாதார வைத்திய அதிகாரி பகுதிகளில் நிலவும் கிராமிய சுகாதார உதவியாளர் பற்றாக்குறையை நீக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியால், மாநகராட்சி மன்றத்தில் கிராமிய சுகாதார உதவியாளர்களாக பயின்று சித்தி அடைந்த எஞ்சியோரை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாநகராட்சி மன்ற சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்தார். (இ-4)

# சந்திரிகாவின் முயற்சிக்கு ரஷ்யா ஒத்துழைப்பு தரும்
## அந்நாட்டு தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 2

வடக்கு கிழக்கு பகுதியில் நடக்கும் யுத்தத்தை நிறுத்தி— சமாதான நிலை ஏற்படுத்த பிரதமர் சந்திரிகா எடுத்துவரும் முயற்சிக்கு நாம் எமது நட்டின் சார்பில் பூரண ஒத்துழைப்பை வழங்குவதுடன், அவரது முயற்சி நிறைவேற வேண்டும் எனவும் ஆசீர் வதிக்கின்றோம்.

இலங்கைக்கான ரஷ்யத் தூதர் ஒலிக் அவர்கள் முன்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தென்மாகாண ஆளுநர் எல் எம். ஜயரத்ன முதலமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை அண்மையில் சந்தித்தபோதே ரஷ்யதூதர் இதனை வெளியிட்டார்.

வடக்கு- கிழக்கு யுத்தத்தை பிரதமர் சந்திரிகா முடிவுக்குக் கொண்டு வருவார் என்ற நம்பிக்கை இப்போது இந்நாட்டு மக்கள் அனைவரது உள்ளத்திலும் வேரூன்றி நிற்கிறது. அவரின் இந்த நல் [illegible] என்பதே எமது ஆவல்— என் [illegible] தெரிவித்தார். (ஒ-ஐ)

## வல்லைப்பாலம் போக்குவரத்து தடை

திருத்த வேலைகளை ஒட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை வல்லைப் பாலத்தின் ஊடாக சகலவிதப் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டிருக்கும் என தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (க)

## இன்று

அரியாலை திருமகள் சனசமூக நிலையத்தின் 43 ஆவது ஆண்டு நிறைவு விழா நிலைய மைதானத்தில் இன்று பிற்பகல் 3 மணிமுதல் நடைபெறவுள்ளது.

விழாவில் மெய்வல்லுநர் போட்டிகள், பொதுக்கூட்டம், கலைநிகழ்ச்சிகள் என்பவும் இடம்பெறும்.

[ஐ]

★ ★ ★

யாழ். கல்வித் திணைக்கள வட இலங்கை நுண்கலை மன்றத்தின் தரம் 4, 5 தேர்வில் சித்தியடைந்தோர்க்கான சான்றிதழ் வழங்கல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மன்றத்தில் நடைபெறும் (க)

★ ★ ★

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபன நிதாரால் நடத்தப்படும் யோகாசனக் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும். (க)

★ ★ ★

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த பயிலரங்கும் ஆய்வரங்கும் நாளை (ஞாயிறு) பிற்பகல் 3 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியப் பணிமனையில் நடைபெறும். பயிலரங்கை வே. சாம்பசிவம் நடத்துவார். கிரக பாவம் என்ற பொருளில் திரு. ஐயா சச்சிதானந்தம் ஆய்வுரை வழங்குவார். ''காமினி-சந்திரிகா ஜாதகம்'' என்ற பொது விவாதமும் இடம்பெறும்.

### வெளிநாட்டவர்கள்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிதிகள் கடுமையாகுகின்றன.

இந்தப் புதிய குடிவரவு குடியகல்வு சட்டவிதிகளை பிரிட்டனின் சட்ட அறிஞர்கள் சமூகம் கண்டித்துள்ளது.

[illegible] உரிமைகளை புதிய சட்டவிதிகள் புறக்கணித்துள்ளன என்று அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### ஜனாதிபதி...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வால் மட்டுமன்றி சிங்கள மக்களினாலும் வரவேற்கப்பட்டுள்ளது.

அரசு எடுத்த இந்த நடவடிக்கைகள் குறித்து விடுதலைப் புலிகள் சாதகமான பதில் நடவடிக்கைகள் சிங்கள தமிழ் மக்களிடையேயான பிணக்கு தீர்வதை கோடி காட்டியுள்ளது.

ஆயினும் பின்னர் அரச படையினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்கள் தீர்வு காணக் கூடிய வாய்ப்புக் குறித்து சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்ட நம்பிக்கை ஓரளவு குறைவதற்குக் காரணமாகியுள்ளது.

இந்த முறுகல் நிலை தீவிரமடையும் வரை ஐ தே. க, உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருப்பதை அறுதானிக்க கூடியதாக உள்ளது:

ஜனாதிபதித் தேர்தலில் பொ ஐ முவுக்கு எதிரான தனது தேர்தல் பிரசாரத்தில் ஐ தே. க. பயன்படுத்த எதிர்பார்த்துள்ள ஆயுதங்களில் முக்கிய இடத்தை இனவாதம் பெற இருப்பது சுதந்திறது.

நாட்டைப் பிளவுபடுத்தும் முயற்சியில் பொ. ஐ மு. அரசு ஈடுபட்டுள்ளது என ஐ. தே. க. ஏற்கனவே குற்றஞ் சாட்டியுள்ளது.

மிக விரைவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதும் இனப் பிரச்சினையின் முழுத் தாற்பரியம் பற்றிய விளக்கத்தை மக்களுக்கு அளிப்பதும் அரசின் முக்கிய நிர்ப்பந்தங்களாகியுள்ளன. இவை புதிய அரசு எதிர்நோக்கும் முக்கிய சவால்களுமாகும். பிரச்சினைக்கு அரசு காணப்போகும் தீர்வு தம் ஏற்கனவே போராடிப் பெற்றுள்ளதை விடக் குறைவாக இருப்பின் அத்தகைய தீர்வை விடுதலைப் புலிகள் ஏற்றுக்கொள்வர் என நம்ப முடியாது.

இவ்வாறு விக்டர் ஐவன் மேலும் தெரிவித்தார்

(ஐ 6)

### வடக்கே...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாக அதிகரித்துள்ளது.

சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதும், சிறுமிகள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுவதும் கவலை தரும் அளவுக்கு அதிகரித்துள்ளன — என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இளம் சந்ததியினரை பாதுகாப்பதற்காக தற்போதுள்ள சட்டங்களை மீளாய்வு செய்ய வேண்டியதன் அவசியத்தை சிறுவர் உரிமை இயக்கம் அந்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. (ஐ-4)

### அரசியல்...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் விசேட பிரிவு ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

பொலிஸ் மா அதிபர் பிராங்டி சில்வா, சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மிராஜ் ஆரியசிங்க ஆகியோரின் தலைமையில் இந்தப் பிரிவு இயங்கும்.

தேசிய புலனாய்வுப் பணியகம் முந்திய அரசாங்க அரசியல்வாதிகளின் விருப்பத்தை நிறைவேற்றும் விதத்தில், அரசியல் எதிரிகளைக் காரணமின்றிக் கைது செய்ததாகவும், பலரை காணாமற் போகச் செய்ததாகவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

அரசியல் தலையீடு அரசியல் ஆதரவு என்பன காரணமாக பொலிஸ் திணைக்களத்தின் மதிப்பு பெருமளவு தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருந்தது என்றும்.

பொலிஸ் துறையின் இருண்ட வரலாற்றில்இருந்து அது தற்போது வெளியே கொண்டு வரப்படுவதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன; (அ-ஐ)


## போஸ்கோ
ஆதரவில்
இல. 3, மருத்துவமனை வீதி.
யாழ்ப்பாணம்.

## யாழ். மிட் - ரவுண் றோற்றறக்ற் கழகம் நடத்தவுள்ள கராத்தே சுற்றுப் போட்டி

பங்குகொள்ள விரும்பும் கராத்தே வீரர்கள் இம்மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை உங்கள் போதனாசிரியரிடமே பெற்று ஒப்படைக்கவும்.

தலைவர்
J. M. R C.

[சி-9260]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன்ஸ் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 698/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 10 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org